




# தமிழரசு

நவம்பர் 16 - 30, 1999 ரூ. 5







# நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.


அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98




# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2030

ஐப்பசி – கார்த்திகை

நவம்பர் 16–30, 1999

மலர் : 31 இதழ் : 10

விலை ரூ.5


## இந்த இதழில்...


★ மருத்துவ உதவித் திட்டம் ---------- 2

★ தொழில் வளர்ச்சி ---------- 8

★ கி.ஆ.பெ. விசுவநாதம் நூற்றாண்டு விழா ---------- 16

★ மலை உலா! ---------- 20

★ சமூக நலத்துறைப் பணிகள் ---------- 21

★ கலைமாமணி விருது ---------- 24

★ வேளாண் சிறப்பு ---------- 28

★ பௌத்தப் பள்ளி ---------- 32

★ ஊரகப் பகுதிகளில் 5003 வீடுகள் ---------- 33

★ நீர்வள ஆதாரங்கள் ---------- 35

★ மகளிர் திட்டம் ---------- 37

★ மத்திய நிதிக்குழுத் திட்டம் ---------- 45


முதல் மற்றும்
கடைசி அட்டையில்
**அரசு நலவாழ்வுத் திட்டம்**

### திருக்குறள்

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

வெளித்தோற்றத்தைப் பார்த்து ஏமாந்து விடாமல், அதுபற்றிய
உண்மையை உணர்வதுதான் அறிவுடைமையாகும்.

*– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*

# மருத்துவ உதவி - அரசு நலவாழ்வுத் திட்டம்

– முதல்வர் கலைஞர் உரை

கிராமப்புற மக்களுக்கு நல்ல மருத்துவ உதவி என்பது எட்டாத கனியாக, கிட்டாத அமுதாகத்தான் இருந்து வருகின்றது. இன்றைக்கு ஏழை எளிய மக்களை நாடி இந்த மருத்துவ உதவித் திட்டம் வந்து கொண்டிருக்கிறது.

இன்று ஒரு புதிய திட்டம், புத்தம் புதிய திட்டம், தமிழகத்தில் தமிழக அரசின் சார்பாகத் தொடங்கப்பட்டு விரிவான முறையில், பரவலான நிலையில், மாநில முழுவதும் நடத்தப்படவிருக்கிறது என்பதை எனக்கு முன்னால் பேசிய அமைச்சர் பெருமக்களும், மாவட்டத்தின் ஆட்சித் தலைவரவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இன்று இந்த விழா நடைபெறுமா என்பது நேற்றிரவு 12 மணி வரையிலே சந்தேகத்திற்குரியதாக இருந்தது. ஏனென்றால் பெருமழை. சென்னை மற்றும் சுற்றுப்புறங்களிலும் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் பெய்த மழையின் காரணமாக விழா நடைபெறுமா என்கின்ற வினா எழுந்து, நான் மாவட்ட ஆட்சித்தலைவரோடு, தொடர்பு கொண்டு இரவு 12 மணி அளவில், விழாவை நடத்தலாமா அல்லது ஒத்தி வைக்கலாமா என்று கேட்டபோது, அவர் ''விழா நடக்கும்போது மழை வராது சார்'' என்று திட்ட வட்டமாகச் சொன்னார். அவருடைய கருத்துதான் பலித்தது. இருந்தாலுங்கூட பத்து மணிக்கு வரவேண்டிய நான் ஒன்பதரை மணிக்கே வந்துவிட்டேன், ''சீக்கிரம் வந்துவிட்டீர்களே'' என்றார். மீண்டும் மழை வரக்கூடுமென்பதால், மழைக்கு முன்பு விழாவினை நடத்திவிடலாம் அல்லவா என்று சொல்லிவிட்டுத்தான் மேடைக்கு வந்திருக்கிறோம்.



ஒரு அற்புதமான காரியம் இன்றைக்கு திருவள்ளூரிலே தொடங்கப்பட்டிருக்கின்றது. திருவள்ளூரிலே இந்த நிகழ்ச்சி தொடங்கப்பட்டதற்காக சட்டமன்ற உறுப்பினர்களும் குறிப்பாகத் தம்பி வேணுவும் மாவட்ட ஆட்சித் தலைவரும் எனக்குப் பாராட்டுச் சொன்னார்கள். திருவள்ளூர் மாவட்டம் என்று அழைக்கப்பட்டாலும் பலரும் ஏதோ திருவள்ளுவர் பெயரால் அமைந்திருக்கின்ற மாவட்டம் என்று கருதிக் கொண்டிருக்கின்றார்கள். திருவள்ளூர் வேறு, திருவள்ளுவர் வேறு என்றாலும், ஓசை எழும்போது திருவள்ளுவர் என்றே தான் எழும். அதைப்போல திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் – அகர முதல எழுத்தெல்லாம் என்று தான் ஆரம்பமாகிறது. அந்த ''அகர முதல'' முதல் குறள் எப்படி ஆரம்பமாயிற்றோ அதைப் போல திருவள்ளூரில் இன்றைக்கு இந்த முகாம் தொடங்கப்பட்டுள்ளது.

இம்முகாமுக்குத் துணை செய்கின்ற
மருத்துவ நிறுவனங்களுக்குப் பாராட்டு

இந்த முகாமுக்கு துணை செய்கின்ற வகையில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இங்கே குறிப்பிட்டதைப் போல, மருத்துவர்களோடு இணைந்து பணியாற்றுவதற்காக முன்வந்துள்ள ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி, சபிதா பல் மருத்துவக் கல்லூரி, மெட்ராஸ் மெடிகல் மிஷன், அரிமா மெடிகல் பவுண்டேஷன் ஆகிய நிறுவனங்களையும் அவற்றின் மருத்துவர்களையும், அவர்களின் நல்லெண்ணத்திற்காக, நல் உதவிக்காக தொடர்ந்து உதவிடுவார்கள் என்ற நம்பிக்கையோடு மனமாரப் பாராட்டி அவர்களையெல்லாம் வாழ்த்தி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த திட்டத்தின் முக்கியமான நோக்கமே அரசு மக்களை நாடிச்சென்று அவர்களுடைய ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது என்பதாகும். ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்று மக்கள் விரும்பினாலும்கூட, அகன்று பரந்து கிடக்கின்ற இந்திய துணைக் கண்டத்தில் தமிழகத்தைப் போன்ற ஆறு கோடி மக்கள், ஏழு கோடி மக்கள் என்று வாழ்கின்ற மாநிலங்களில் மருத்துவ உதவியை எளிதிலே பெறுவதென்பது இயலாத காரியமாக இருக்கின்றது. அதிலும் கிராமப்புற மக்களுக்கு நல்ல மருத்துவ உதவி என்பது எட்டாத கனியாக, கிட்டாத அமுதாகத்தான் இருந்து வருகின்றது. கனி எட்டவில்லை என்பதற்காக எம்பி எம்பி



குதித்தாலும் கூட அது எட்டவில்லை என்பதற்காகக் கனியாகப் பார்த்து கருணை கொண்டு அதுவே அந்த ஏழையின் 1கையின் பக்கம் அந்தக் கிளையே தணிந்து வந்து கனியைப் பறித்துக் கொள் என்று சொல்வது எப்படியிருக்குமோ அதைப் போலத்தான், இன்றைக்கு ஏழையெளிய மக்களை நாடி இந்த மருத்துவ உதவித் திட்டம் வந்து கொண்டிருக்கின்றது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.



மாவட்ட ஆட்சித் தலைவர் இங்கே இந்த அரசின் திட்டங்களைப் பற்றியெல்லாம் விவரித்தார். என்னுடைய அருமை நண்பர் சுதர்சனம் அவர்கள் யாருக்கும் பயப்படாமல் இந்த விழாவிலே அரசாங்கத்தின் நல்ல காரியங்களையெல்லாம் பாராட்டி அவருடைய மனசாட்சி வழங்கிய தைரியத்தோடு என்னை வாழ்த்தி இந்தத் திட்டத்தின் சிறப்பை எடுத்துக் கூறியிருக்கிறார்.

**1969 முதல் இன்றுவரை கழக ஆட்சி நிறைவேற்றியுள்ள நலவாழ்வுத் திட்டங்கள்**

இந்த அரசு இன்றைக்கல்ல, 69-70-ஆம் ஆண்டு முதலே கண்ணொளித் திட்டம், தொழுநோயாளிக்கான மறுவாழ்வு இல்லங்கள் அமைக்கின்ற திட்டம், ஊனமுற்றோருக்கு நல்வாழ்வுத் திட்டம், 1996க்குப் பிறகு தொடங்கப்பட்டிருக்கின்ற, மக்களும் பங்கு கொள்கின்ற பணிகள் நடைபெறவேண்டுமென்பதற் காக தொடங்கப்பட்ட நமக்கு நாமே திட்டம், அண்ணா அவர்களுடைய பெயரால் தொடங்கப்பட்டிருக்கின்ற அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், தந்தை பெரியார் அவர்களுடைய பெயரால் தொடங்கி இதுவரை ஐம்பதுக்கு மேற்பட்ட இடங்களில் உருவாயிருக்கின்ற, எல்லா மக்களும் சமமாக வாழக்கூடிய சமத்துவபுரங்களை உருவாக்குகின்ற திட்டம், இப்பொழுது மதுரையிலே கடந்த மாதம் தொடங்கியிருக்கின்ற உழவர் சந்தை-உழவர்கள் தாங்கள் விளைவித்த பொருளை இடையிலே இடைத் தரகர்கள் இல்லாமல், கமிஷன் ஏஜெண்டுகள் இல்லாமல் தங்களே சந்தைக்குக் கொண்டுவந்து பொதுமக்களிடத்தில் விற்கின்ற திட்டம், அதிலே பொதுமக்களும் குறைந்த விலை கொடுத்து, நியாயமான விலை கொடுத்து காய்கறிகளை வாங்குகின்ற வழி பிறந்திருக்கின்றது.

மதுரையைப் பொறுத்த வரையில் கடந்த மாதத்தில் நான் அந்தத் திட்டத்தைத் தொடங்கிவைத்த பிறகு மற்ற எல்லா பகுதிகளிலும் விற்ற காய்கறிகளின் விலை குறைந்து விட்டதாகச் சொல்கிறார்கள், காரணம் உழவர் சந்தையிலே விலை குறைவாகக் கிடைக்கின்ற காரணத்தால் அந்த அளவிற்கு நாமும் விற்றால்தான் வியாபாரம் நடக்குமென்ற எண்ணம் அந்த வியாபாரிகளிடத்திலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. உழவர் சந்தை ஒவ்வொரு நகராட்சி மன்றத்திலும் ஏறத்தாழ நூற்றுக்கு மேற்பட்ட நகராட்சிகளில் இந்த ஆண்டுக்குள் உருவாக இருக்கின்றன. அந்தத் திட்டங்களோடு இன்று தொடங்கப்படுகின்ற இந்த அரசு நலவாழ்வுத் திட்டமும் ஒன்றாக அமைந்திருக்கின்றது.

கிராமப்புறத்து மக்கள் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற நவீன மருத்துவ முறைகளையெல்லாம் இன்னமும் அறியாதவர்களாக இருக்கிறார்கள். உங்களுக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். என் நண்பர்களிடத்திலே பல நேரங்களிலே சொல்லியிருக்கிறேன். அமைச்சர் களிடத்திலே கூட பேசியிருக்கிறேன். சுமார் 65 ஆண்டுகளுக்கு முன்பு நான் மிகச் சிறுவனாக இருந்த காலகட்டத்தில் கிராமத்துப் பள்ளியிலே படித்துக் கொண்டிருந்தபோது ஆஸ்பத்திரி என்றால் நான் பிறந்த ஊரிலிருந்து நான்கைந்து மைல் கடந்தால்தான் அதைக் காண முடியும். அப்படிப்பட்ட ஒரு குக்கிராமத்திலேதான் நான் பிறந்து வளர்ந்தேன். திருக்குவளையில், அந்தத் திருக்குவளையிலிருந்து வலிவலம் என்கின்ற ஒரு ஊருக்குச் சென்றால்தான் அங்கே ஒரு டாக்டர் புதிதாக ஏற்படுத்திய மருத்துவமனையைக் காண முடியும்.

என்னுடைய சகோதரிக்கு திடீரென்று காய்ச்சல் ஏற்பட்டு அதைத் தீர்ப்பதற்கு சித்த வைத்தியர்கள் எல்லாம் முயன்றும் முடியாமல், கிராமத்திலே உள்ளவர்களின் நம்பிக்கையின்படி ஏதேதோ மந்திர தந்திரங்களைச் செய்து பார்த்தும் காய்ச்சல் குறையாமல் கஷ்டப்பட்ட போது, ஊசிபோட்டுக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். ஊசி போடுகின்ற டாக்டர் யாரும் எங்கள் ஊரில் இல்லை. வலிவலம் என்ற கிராமத்திலே இருக்கின்ற மருத்துவமனையிலேதான் ஊசி போடுகின்ற ஒரு டாக்டர் வந்திருக்கிறார் என்று சொன்னவுடன், எங்கள் வீட்டில் எல்லோரும் ஊசி போட்டுக் கொள்ளப் பயந்தார்கள்.

இன்றைக்கு இந்த முகாமில் பார்த்தேன். அவரவர்களும் தங்கள் கைகளை தாராளமாக நீட்டி ஊசிபோட்டுக் கொண்ட காட்சியை பார்த்தேன். ஊசி போட்டுக் கொள்கிற நேரத்தில் ஒரு முகச்சுளிப்பு கூட இல்லாமல் ஊசி போட்டுக் கொண்ட தாய்மார்களையெல்லாம் கண்டேன். ஆனால் அன்றைக்கு என்னுடைய சகோதரிக்கு வலிவலம் என்ற கிராமத்திற்குச் சென்று ஊசி போட்டுக் கொள்கிற விஷயம் பெரிய விஷயமாக எங்கள் கிராமத்திலேயே பேசப்பட்டது.

என் சகோதரியின் பெயராகிய பெரியநாயகம் என்ற பெயரைச் சொல்லி, அதாவது முத்துவேலின் மகள் பெரியநாயகத்திற்கு ஊசி போடப் போகிறார்களாம் என்று ஊரெல்லாம் ஒரே செய்தி, சரியென்று ஒருநாள் காலை எட்டு மணிக்கு அந்த ஊருக்குச் செல்வதென்று புறப்பட்ட போது பத்து, பன்னிரெண்டு கட்டை வண்டிகளில் - மாட்டு வண்டிகளில் ஊராரெல்லாம் ஏறிக்கொண்டு என் சகோதரிக்கு ஊசி போடுகின்ற நிகழ்ச்சியைக் காண்பதற்காகவும் அதற்கு துணை இருப்பதற்காகவும் உடன் வந்தார்கள்.

### நாகரிகத்தின் முழுமையை இன்றைக்கும் உணராத நிலையில் கிராமங்கள்

**இப்படி பன்னிரண்டு வண்டி கட்டிக் கொண்டு வேறொரு கிராமத்திற்குச் சென்று ஒரு ஊசி ஒருவர் போட்டுக் கொள்வதற்காக அன்றைக்கு நாங்கள் அவ்வளவு பயந்தோம். கிராமங்கள் அப்படி இருந்தன. அந்தக் கிராமங்கள் எல்லாம் மெல்ல மெல்ல வளர்ந்து இன்றைக்கு நாகரிகம் பெற்றிருந் தாலும் கூட, நாகரிகத்தின் முழுமையை உணராத நிலைதான் கிராமங்களில் இப்போது இருக்கின்றன. நவீன யுக்திகளை, நவீன மருத்துவமனைகளை இன்னமும் நாம் கிராமங்களிலே பயன்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கின்றது.**

**சித்த வைத்தியத்திலே மூலிகைகளின் மூலம் பச்சிலைகளின் மூலம் சில நோய்களைத் தீர்க்க முடியுமென்றாலும்கூட, அலோபதி என்று சொல்லப்படுகின்ற இந்த முறை அவசியங்களிலே ஒன்றாக ஆகிவிட்டிருக்கின்றது. அதனால்தான் நோயை உணர்ந்து கொள்வதற்கு ஒரு விழிப்புணர்ச்சி தேவை. தனக்கு வந்துள்ள நோய் என்னவென்று தெரியாத சூழ்நிலையில் மக்கள் இருக்கக் கூடாது. முன்பெல்லாம் இருதய நோய்**



வந்து இருதயம் நின்று போய் இறந்து விட்டால் ஏதோ முனீஸ்வரன் அடித்து விட்டான், காட்டேரி அடித்து விட்டது, காத்தவராயன் அடித்துவிட்டான் என்று சொல்லி சமாதானம் தேடிக்கொண்டிருந்தோம்.. போய்க் கொண்டேயிருந்தான், ரத்தம் ரத்தமாக வாந்தியெடுத்தான் என்றால் உடனே முனீஸ்வரன் அடித்து விட்டான், அதனால் இறந்துவிட்டானென்று சொல்லி நம்முடைய மனதுக்கு சமாதானம் சொல்லிக் கொண்டோம்.

**வியாதிகளை உணர்ந்து கொள்ள விழிப்புணர்ச்சியூட்டும் திட்டம்**

அவனை அடித்தது முனீஸ்வரன் அல்ல. இருதயம் நின்று விட்டது அல்லது இருதயம் வெடித்து விட்டது. ஏற்கனவே அவனுக்கிருந்த நரம்பு வியாதிகளை அல்லது இருதயத்திலே இருந்த சிறு சிறு நோய்க்கான அறிகுறிகளை கவனிக்காமல் இருந்து விட்ட காரணத்தினால் முன்கூட்டியே அதற்கான சிகிச்சை முறைகளை செய்து கொள்ளாமல் இருந்து விட்ட காரணத்தினால் அல்லது அந்த சிகிச்சைகளே இல்லாமல் இருந்த காரணத்தினால் அல்லது இருந்தும் அதைத் தெரிந்து கொள்ள முடியாத சூழ்நிலையில் இருந்த காரணத்தால் வியாதிகளிலிருந்து மனிதன் தப்புவது அரிதாக இருந்தது. இன்றைக்கு வியாதிகளை உணர்ந்து கொள்ளக் கூடிய விழிப்புணர்ச்சியை ஊட்டக்கூடிய ஒரு திட்டம்தான் இந்தத் திட்டம்.

இந்தத் திட்டத்தின் அடிப்படையில் ஏழையெளியோர் தங்களுக்கு ஏதாவது நோய் வந்து அதனால் ஏற்படுகின்ற வேதனையைத் தடுத்துக் கொள்வதற்கு மட்டுமே தற்போது டாக்டர்களை நாடுகிறார்களே, அதை மாற்றியமைத்து, பொதுவாக மக்களிடத்திலே உள்ள மனோநிலையை அடியோடு மாற்றி, வரும் முன் காத்துக் கொள்ளக் கூடிய நிலையை அவர்களுக்கு ஏற்படுத்தத்தான் இந்தத் திட்டத்தை நாங்கள் தொடங்கியிருக்கிறோம்.

இந்தத் திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு கண், பல், காது, மூக்கு, தொண்டை, வயிறு தொடர்பான நோய்களும், நீரிழிவு நோய், காசநோய், இருதய நோய், குழந்தை மருத்துவம், மகப்பேறு மருத்துவம், முதியோர்க்குத் தேவையான பரிசோதனைகள் ஆகியவைகள் எல்லாம் மேற்கொள்ளப்பட விருக்கின்றன.

இலவசமாக இரத்தப் பரிசோதனையும் செய்யப் படுகின்றது. பரிசோதனைக்குப்பின், நோய் கண்டறிந்து ரத்தத்தைப் பரிசோதனை செய்து கொண்டால் என்ன நோய் இருக்கிறது என்பதை சுலபமாகத் தெரிந்து கொள்ள முடியும். அப்படி நோயைக் கண்டறிந்து அதற்கான முதல்




சிகிச்சை செய்து இலவசமாக மருந்துகளும் இந்த முகாமிலே வழங்கப்படும்.

**மாதந்தோறும் ஐம்பது இடங்களில் பன்முனை மருத்துவ சிகிச்சை முகாம்**

தொடர்ந்து சிகிச்சை தேவைப்படின், நோயின் தன்மை அடிப்படையில் எந்த மருத்துவமனைக்கு எப்பொ தெல்லாம் செல்ல வேண்டும் என்கின்ற விவரங்களுடன் அடையாள அட்டைகளும் வழங்கப்படுகின்றன. அந்த அடையாள அட்டைகள் இந்த மேடையிலே வழங்கப்பட்ட காட்சியை நீங்கள் எல்லாம் கண்டீர்கள், தமிழ்நாட்டிலே உள்ள எல்லா கிராமங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள்

மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றிலே உள்ள மக்கள் அனைவரும் பயனடையும் வண்ணம் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு மாதமும் ஐம்பது இடங்களில் இந்தப் பன்முறை மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சை முகாம்கள் நடத்தப்படும்.

அனைத்து மாவட்டங்களிலும் இந்த முகாம்களை செம்மையாக நடத்தி அவற்றின் பயன்கள் முழு அளவில் பொது மக்கள் அனைவரையும் சென்றடைவதற்கு மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்படும். இந்தக் குழு ஒவ்வொரு மாதமும் ஐம்பது இடங்களைத் தேர்வு செய்து, எந்தெந்த நாட்களில், எந்தெந்த மருத்துவர் குழு எந்தெந்த இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்பதை முன்கூட்டியே முடிவு செய்து அந்தந்தப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு விரிவான முறையில் அறிவிக்கும்.




இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே விரிந்து பரந்த அளவில் மாநிலம் முழுவதும் இந்த முகாம்கள் எல்லா மக்களையும் சந்தித்து எல்லோருடைய வியாதிகளைப் பற்றியும் முன்கூட்டியே அறிந்து பரிசோதனை செய்து, சிகிச்சை உடனடியாக அளிக்கத் தேவைப்பட்டால் அளித்து, தொடர்ந்து அளிக்கப்பட வேண்டுமேயானால் அதற்கான வழி வகைகளையும் காண்பித்து செயல்படக்கூடிய திட்டம்தான் இந்த அரசு நலவாழ்வுத் திட்டமாகும்.


அந்தத் திட்டத்தை இங்கே முதன் முதலாகத் தொடங்குவதற்கு ஆர்வத்தோடு முன் வந்து அக்கறையோடு அதை இங்கே செயல்படுத்தியிருக்கின்ற நம்முடைய மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் பிரபாகர் நல்ல சுறுசுறுப்பான இளைஞர் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். இப்படிப்பட்ட சுறுசுறுப்பான இளைஞர்கள் ஆர்வத்தோடு தமிழகத்திலே உள்ள எல்லா மாவட்டங்களிலும் பணியாற்றுவார்களேயானால், பலரும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றாங்கள். ஒரு சிலர் மட்டும் பிரபாகர் போன்றவர்களிடம் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படி எல்லோரும் பணியாற்றுவார்களேயானால் அரசாங்கத்தினுடைய வேலை பளு குறையும், அதற்குப் பொது மக்களாகிய உங்களுடைய ஒத்துழைப்பும் தேவை என்று கூறி இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்கிறேன். ★

---


*— மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 29–11–1999 அன்று திருவள்ளூர் மாவட்டம், பாடியநல்லூரில் அரசு நலவாழ்வுத் திட்டத்தினை தொடங்கிவைத்து ஆற்றிய உரை.*

# கலைஞர் ஆட்சியில் தொழில் வளர்ச்சி இந்தியாவிலேயே முதலிடம்


ஒளிவு மறைவின்றி முதலீட்டாளர்கள் விரும்பும் வண்ணம் தொழில் நட்புறவு நடைமுறை.




தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து அனுமதிகளையும் ஒருசேர விரைந்து வழங்கிட 'ஒற்றைச் சாளர முறை'.





தொழில் முதலீடுகளுக்குத் தடையை நீக்கி, விதிகள் மற்றும் நடைமுறைகள் எளிமையாக்கப்பட்டுள்ளன.




மின்சக்தியை அதிக அளவில் உருவாக்கி, அதை நல்ல முறையில் பகிர்ந்தளித்தல்.









புதிய துறைமுகங்களை உருவாக்குதல் மற்றும் இயங்கும் துறைமுகங்களை மேம்படுத்துதல்.

அகலவழி இரயில் பாதைப் பணிகளைத் துரிதப்படுத்துதல்.









நவீன தகவல் தொடர்பு வசதிகளை ஏற்படுத்தும் நோக்கில் ரூ.320 கோடியில், சென்னை – தரமணியில் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா (டைடல் பார்க்).

டிட்கோ மூலம் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலம் 4,820 ஏக்கர்.






சிப்காட் மூலம் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலம் 3,766 ஏக்கர்.



# சிப்காட் தொழில் வளாகத்தில் 32 தொழில் மனைகள் ஒதுக்கீடு



1,824 ஏக்கர் பரப்பில், சென்னை–இருங்காட்டுக்கோட்டையில் உருவாக்கப்பட்டுள்ள சிப்காட் தொழில் வளாகத்தில், 32 தொழில் நிறுவனங்களுக்கு தொழில்மனைகள் ஒதுக்கீடு இதில்,

536 ஏக்கர் பரப்பில், 2,450 கோடி ரூபாய் முதலீட்டில் ஹுண்டாய் மோட்டார் நிறுவனம்;

20 ஏக்கர் பரப்பில் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மட்சூசிடா ஏர்கண்டிஷனிங் இந்தியா நிறுவனம்;

சுமார் ஐந்து ஏக்கர் பரப்பில், 8.6 கோடி ரூபாய் முதலீட்டில் லூமாக்ஸ் சா[illegible]ப் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் ஆ[illegible]டா மோட்டிவ் விளக்குகள் தயாரிக்கும் தொழிற்சாலை;


சுமார் பத்து ஏக்கர் பரப்பில் 45 கோடி ரூபாய் முதலீட்டில் ஜேபிஎம்சுங்வூ (JBM SUNGWOO) லிமிடெட் நிறுவனத்தின் உலோகத் தகடுகள் தயாரிக்கும் தொழிற்சாலை;


பத்து ஏக்கர் பரப்பில், 40 கோடி ரூபாய் முதலீட்டில் கார் உதிரிபாகங்கள் தயாரிக்கும் இல்ஜின் ஆட்டோமேட்டிவ் தொழிற்சாலை;

இரண்டு ஏக்கர் பரப்பில், 17 கோடி ரூபாய் முதலீட்டில் கார் உதிரிபாகங்கள் தயாரிக்கும் ஜே.கே.எம். டெரீம் ஆட்டோமேட்டிவ் தொழிற்சாலை;

மூன்று ஏக்கர் பரப்பில், 23 கோடி ரூபாய் முதலீட்டில் வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் டைனமேட்டிக் தொழில்நுட்பத் தொழிற்சாலை;

ஐந்து ஏக்கர் பரப்பில், 9 கோடி ரூபாய் முதலீட்டில் வாகன உதிரிபாகம் தயாரிக்கும் சார்தா மோட்டார் தொழிற்சாலை;





ஒன்பது ஏக்கர் பரப்பில், 30 கோடி ரூபாய் முதலீட்டில் வாகனங்களுக்கான பிரேக்குகள் தயாரிக்கும் மேணடோ பிரேக் சிஸ்டம்ஸ் தொழிற்சாலை;

பத்து ஏக்கர் பரப்பில், 44 கோடி ரூபாய் முதலீட்டில் உலோகத் தகடுகள் தயாரிக்கும் தொழிற்சாலை;

நான்கு ஏக்கர் பரப்பில், 9 கோடி ரூபாய் முதலீட்டில் கார் கதவுகளுக்கான பாகங்கள் தயாரிக்கும் பி.எச்.சி. உற்பத்தி தொழிற்சாலை;

பத்து ஏக்கர் பரப்பில், 43 கோடி ரூபாய் முதலீட்டில் உலோகத் தகடு பாகங்கள் தயாரிக்கும் டோங்கிவிஷன் தொழிற்சாலை

– ஆகிய 12 தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன.


இந்தியா முழுவதிலும் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டு தொடங்கப் பட்ட தொழில்களின் எண்ணிக்கை 3503. அவைகளில் 1999 ஏப்ரல் நிலவரப்படி தமிழகத்தில் மட்டும் தொடங்கப்பட்டுள்ள தொழில்களின் எண்ணிக்கை 584. ஆறில் ஒரு பங்கு தொழில்கள் தமிழகத்தில் செயல்படுகின்றன என்பது மற்றொரு பெருமைக்குரிய செய்தியாகும்.

27 கோடி ரூபாய் செலவில் மறைமலைநகரில் வாலியோ ஃபிரிக்ஷன் மெட்டீரியல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நான்–ஆஸ்பெஸ்டாஸ் பிரிக்ஷன் மெட்டீரியல்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலை; காரின் உதிரி பாகங்கள் தயாரிக்கின்ற தொழிற்சாலை;

5 கோடி ரூபாய் செலவில் ஓசூரில் ப்ளூமிங் மெடோஸ் லிமிடெட் நிறுவனத்தின் மலர் வளர்க்கும் தொழிற்சாலை.

41 கோடி ரூபாய் செலவில் ஈரோடு அருகே உள்ள சோளங்கபாளையத்தில் எஸ்.கே.எம். எக் பிராடக்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் முட்டை பதப்படுத்தும் தொழிற்சாலை.

5 கோடி ரூபாய் செலவில் காஞ்சிபுரம் அருகில் உள்ள செட்டிப்பாளையத்தில் பாரத் டெக்ஸ் பேஷன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை.



300 கோடி ரூபாய் செலவில் கும்மிடிப்பூண்டியில் டூபோண்ட் லிமிடெட் நிறுவனத்தின் நைலான் இழை தயாரிக்கும் தொழிற்சாலை.


27 கோடி ரூபாய் செலவில் தாம்பரம் ஏற்றுமதி வளாகத்தில் ஏசியன் லைட்டிங் நிறுவனத்தின் உலோகக் குழல் விளக்கு தயாரிக்கும் தொழிற்சாலை.

4.5 கோடி ரூபாய் செலவில் கரூர் அருகிலே உள்ள அப்பர்பாளையத்தில் கரூர் யார்ன் லிங்க்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நூல்–ஆடை தயாரிக்கும் தொழிற்சாலை.


10 கோடி ரூபாய் செலவில் ஓசூரில் டாரஸ் நாவல்டீஸ் லிமிடெட் நிறுவனத்தின் டோலமைட், ஸ்டோன்வேர் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

21 கோடி ரூபாய் செலவில் திருப்போரூரில் ஸ்ரீராம் ஆட்டோ காம்பொனன்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

11 கோடி ரூபாய் செலவில் சென்னைக் கருகில் உள்ள மணலியில் ரமணசேகர் ஸ்டீல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் உலோகச் சுருள்களைத் தகடாக மாற்றும் தொழிற்சாலை.



1995–96இல் ஏற்றுமதி செய்யப்பட்ட மென்பொருள்களின் (Software) மதிப்பு ரூ.37 கோடி.
1998–99இல் ஏற்றுமதி செய்யப்பட்ட மென்பொருள்களின் (Software) மதிப்பு ரூ.1246.14 கோடி.







12 கோடி ரூபாய் செலவில் கோயம்புத்தூரில் இன்சில் இண்டஸ்ட்ரியல் லிமிடெட் நிறுவனத்தின் தொழிற்சாலை.

33 கோடி ரூபாய் செலவில் புழல் கிராமத்தில் செம்பவாங்–ஸ்ரீராம் நிறுவனம் (சிங்கப்பூர் நிறுவனம்) பொருள் விநியோகத் தொழிற்சாலை.

500 கோடி ரூபாய் செலவில் சேலத்தில் சிஸ்கால் நிறுவனத்தின் எஃகுத் தொழிற்சாலை.




756 கோடி ரூபாய் செலவில் சென்னை பேசின் பிரிட்ஜ் ஜி.எம்.ஆர். வாசவி நிறுவனத்தின் மின்திட்டம்.

15 கோடி ரூபாய் செலவில் திருபெரும்புதூரில் இன்வால்வ் (மெடிக்கல்) இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் குருதிப் பைகள் (Blood bags) தயாரிக்கும் தொழிற்சாலை.

20 கோடி ரூபாய் செலவிலே ஓசூரில் டான்ப்ளோரா இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட் நிறுவனத்தின் தொழில் வளாகம்.


6 கோடி ரூபாய் செலவில் (Bio-technology Park for Women) சென்னையில் மகளிருக்கான உயிர் தொழில்நுட்பப் பூங்கா.

210 கோடி ரூபாய் செலவிலே செங்கல்பட்டில் மகேந்திரா இண்டஸ்ட்ரியல் பார்க் லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோ உதிரிபாகங்களுக்கான தொழில் வளாகம்.

27.7 கோடி ரூபாய் செலவில் சென்னையில் மெட்டெக் ப்ராக்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தொழிற்சாலை.

5.6 கோடி ரூபாய் செலவில் சென்னையில் இண்டியன் நேச்சுரல் மெடிக்கல் ப்ராடக்ட்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

28.5 கோடி ரூபாய் செலவில் மறைமலை நகரில் ஆப்டிக் பைபர் கேபிள் ப்ராஜெக்ட் தொழிற்சாலை.



3,200 கோடி ரூபாய் செலவில் கடலூரில் பென்னார் ரிபைனரிஸ் நிறுவனத்தின் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை.

142.65 கோடி ரூபாய் செலவில் சேலத்தில் சிஸ்கால் நிறுவனத்தின் மெட்டலர்ஜிகல் கோக் தயாரிக்கும் தொழிற்சாலை.

44.75 கோடி ரூபாய் செலவில் தரமணியில் கலாடா ரிம்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அலுமினியத் தொழிற்சாலை.

200 கோடி ரூபாய் செலவில் எண்ணூரில் வான் ஓம்மரன் டேங்க் டெர்மினல் நிறுவனத்தின், கெமிக்கல் சேமிப்பு டேங்க் தொழிற்சாலை.

எண்ணூரில் 5,500 கோடி ரூபாய் முதலீட்டில் 2,000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் எல்.என்.ஜி. எரிவாயு மின் திட்டம்.

ஜெயங்கொண்டத்தில் 5,200 கோடி ரூபாய் முதலீட்டில் 1,500 மெகாவாட் பழுப்பு நிலக்கரி மின்திட்டம்.

20 கோடி ரூபாய் செலவில் கும்மிடிப்பூண்டியில் ஏற்றுமதி நிறுவனங் களுக்கான ஒரு தொழிற் பூங்கா.

மொத்த முதலீடு ரூ.22,946 கோடி. நேரடி வேலைவாய்ப்பு 11,000 பேர்கள். மறைமுக வேலைவாய்ப்பு 1.5 இலட்சம் பேர்கள்.

1995ஆம் ஆண்டில் தொழில் வளர்ச்சி முதலீட்டில் தமிழகம் இந்தியாவிலே 5ஆவது இடத்தில் இருந்தது. தற்போது முதல் இடத்தில் உள்ளது.

★ ★ ★




# கி.ஆ.பெ. விசுவநாதம்

அண்ணன் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களுடைய நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு அவரை நெஞ்சம் நிறைய நினைத்துக் கொண்டிருக்கின்ற – வாழ்த்திக் கொண்டிருக்கின்ற – பாராட்டிக் கொண்டிருக்கின்ற – உங்களிடையே சில மணித்துளிகள் இருப்பதில் நான் மிகுந்த பெருமையும் உவகையும் அடைகிறேன். கி.ஆ.பெ. அவர்களுடைய அருமை பெருமைகளை விழாத் தலைவர் பி.டி.ஆர். அவர்களும் தொடர்ந்து உரையாற்றிய ராஜாராம் அவர்களும், ஆர்.எம்.வீ. அவர்களும், தம்பி வைரமுத்து அவர்களும் மிக விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

1938ஆம் ஆண்டு – நண்பர் ராஜாராம் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல – நான் பொது வாழ்க்கையிலே ஈடுபட்ட ஆண்டு பள்ளி மாணவனாக துள்ளித் திரிந்த அந்தக் கால கட்டத்தில் தமிழை வீழ்த்த, தமிழர்களுடைய நலத்தைச் சாய்த்திட இந்தி என்ற மொழி திணிப்பு மொழியாக படையெடுத்த நேரத்தில், அதை எதிர்த்துப் போர்க்கொடி தூக்கப்பட்ட அந்தக் காலக் கட்டத்தில் திருவாரூர் பள்ளியிலே மாணவனாக இருந்த நானும் கட்டாய இந்தியை எதிர்க்கின்ற களத்தில் இறங்கினேன்.

## இந்தித் திணிப்பை எதிர்த்துத் தமிழர் படையைத் திரட்டியவர்கள்

அந்த நேரத்தில் தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும், அண்ணன் விசுவநாதம் அவர்களும் தமிழகத்திலே பல இடங்களிலே சுற்றுப்பயணம் செய்து இந்தியை எதிர்க்க வேண்டிய காரணம் என்ன என்பதை விளக்கி தமிழர் படை திரட்டினார்கள்.

அப்பொழுது எங்கள் ஊர் கவிஞர், பாவலர் பாலசுந்தரம் – அந்தக் காலத்தில் தந்தை பெரியாரை தோழர் ஈ.வெ.ராமசாமி என்ற அழைக்கின்ற நேரம் – இந்தி எதிர்ப்பு குறித்து ஒரு பாடல் எழுதினார். அந்தப் பாடலின் இறுதியில் – "தோழர் ஈ.வெ. ராமசாமியும், விசுவநாத், சோமுடன் பாண்டியன் பாலும் சுற்றுப் பிரயாணம் செய்தே உன் சூழ்ச்சியைக் கக்கானில் மாட்டுகிறார் மேலும்" என்று அமைந்திருக்கும்.

இதில் தோழர் ஈ.வெ. ராமசாமி என்பது தந்தை பெரியாரைக் குறிக்கும், விசுவநாத் என்பது அண்ணன் விசுவநாதம் அவர்களைக் குறிக்கும், சோமு என்பது சோமசுந்தர பாரதியாரைக் குறிக்கும். பாண்டியன் என்பது சௌந்தர பாண்டியனாரைக் குறிக்கும். பாலு என்பது அன்றைக்கு இருந்து பிறகு திருவாசகமணியாக மாறிவிட்ட கே.எம். பாலசுப்ரமணியத்தைக் குறிக்கும்.

கட்டாய இந்தியைத் தமிழர்கள் மீது திணித்தவர்களைப் பார்த்து அன்று எழுந்த இந்தப் போர்க்குரல் திருவாரூரிலிருந்து எழுந்தது. அந்தப் பாடலுக்குச் சொந்தக்காரர் பாவலர் பாலசுந்தரம் அவர்கள்.

அவரிடத்திலே நான் பெற்ற உணர்வுகள் – பேரறிஞர் அண்ணா அவர்களுடைய எழுத்துக்களை – தந்தை பெரியார் அவர்களுடைய பேச்சுக்களை ரசித்து, ரசித்ததோடு நில்லாமல் கவரப்பட்டு, இந்த இனத்திற்காக பின்னர் கவலைப்பட்டு, மொழிக்காகக் கவலைப்பட்டு, நானும் அந்தக் களத்திலே குதித்த அந்தக் காலக் கட்டத்தில் ஒரு நாள் திருவாரூரில் தெற்கு வீதி முனையும் கீழவீதி முனையும் சந்திக்கின்ற ஒரு இடத்தில் ஐந்தாயிரம் பேர் கொண்ட ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் ஒரு நெடிய உருவம் – சிவந்த மேனி – வெள்ளை உடை – வெள்ளை உடை என்றால் கதராடை அல்ல, கைத்தறி ஆடையுமல்ல, இறுதிக்காலம் வரை எந்த ஆடையை உடுத்தியிருந்தாரோ அந்த மஸ்லீன் உடை. அந்த உடையோடு கழுத்திலே ஒரு சின்ன தங்கச் சங்கிலி மின்னிட பேசிக் கொண்டிருந்தார். அவர் தான் அண்ணன் கி.ஆ.பெ. அவர்கள்.

என்ன பேசினாரென்றால் கட்டாய இந்தியை எதிர்த்து தமிழ்நாட்டுத் தாய்மார்கள் எத்தனை பேர் சிறைச்சாலையில் வாடிக் கொண்டிருக்கின்றார்கள். எத்தனை பேர் ஆடவர்கள் சிறையிலே அவதிப்படுகிறார்கள். சிறைச்சாலையிலே அடைபட்டிருந்த தாளமுத்து, நடராஜன் என்ற இரண்டு தங்கங்களைத் தமிழுக்காக நாம் இன்றைக்கு இழந்திருக்கிறோம் என்பனவற்றை அவருடைய கம்பீரமான குரலில் எடுத்துச் சொல்லி கண்ணீர் கலந்த வார்த்தைகளால் அங்கே குழுமியிருந்த தமிழ் பெருமக்கள் அத்தனை பேரையும் பெருமூச்செறியச் செய்து உணர்வு பெற்றவர்களாகச் செய்து அந்தக் கூட்டம் முடிந்த பிறகு ஒருவரோடு ஒருவர் பேச முடியாத சூழ்நிலையில் மௌனமாக கலைந்து சென்ற காட்சியை நான் கண்டேன். அவர்களில் நானும் ஒருவன்.

மாநில மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிலே ராஜாராம் அவர்களும் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும், ஆர்.எம்.வீ. போன்றவர்களும் கலந்துகொண்டார்கள். அந்த மாநாட்டிற்கு அண்ணன் கி.ஆ.ப. அவர்களையும் அழைத்திருந்தோம். வந்து உரையாற்றினார். இங்கே குறிப்பிட்டதைப் போல திராவிட என்ற சொல்லை அவர் அந்தக் காலத்திலே ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் பெரியாரிடமிருந்து பிரிந்து சென்றதற்கே அது ஒரு காரணம். அப்போது, தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை நீதிக்கட்சியாக அன்றைக்கு அடையாளம் காட்டப்பட்ட இயக்கத்தை தமிழர் கழகம் என்றுதான் மாற்ற வேண்டும் என்பது அண்ணன் விசுவநாதம் அவர்களுடைய கருத்து. ஆனால் அதற்கு மாறாக தந்தை பெரியார் அவர்கள் திராவிடர் கழகம் என்று இந்த இயக்கத்திற்குச் சேலத்திலே பெயரிட்ட காரணத்தினால் 26 காரணங்களைச் சொல்லி அண்ணன் கி.ஆ.பெ. அவர்கள் பெரியாரிடமிருந்து பிரிந்து சென்றார்கள். பிரிந்து சென்றார்களே தவிர பெரியாருடைய கொள்கைகளை, இலட்சியங்களை ஆர்.எம்.வீ. அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல இழந்து செல்லவில்லை. அவைகளையெல்லாம் எடுத்துச் சென்றார். மனதிலே பதித்துச் சென்றார். அதனால்தான் இன்றைக்கு நாம் அவரை நினைவு கூர்கிறோம். அவரை இன்றைக்கு வாழ்த்திக் கொண்டிருக்கிறோம். போற்றிக் கொண்டிருக்கிறோம்.

அந்த மாநாட்டிலே அவர்கள் கலந்துகொண்டு பேசினார்கள். மாநாடு இரவு 12 மணிக்கு முடிந்த பிறகு நான் மதுரையிலிருந்து திருச்சிக்கு ஒரு காரில் அன்பில்தர்மலிங்கம், பொன்மலை பாரங்குசம் ஆகியோருடன் திரும்புகிறேன். இரவு 2 அல்லது 3 மணி இருக்கும். திருச்சியில் காரிலிருந்து பார்த்தால் அந்தச் சாலையின் ஒரு ஓரத்திலே அண்ணன் விசுவநாதம் அவர்கள் கையிலே ஒரு பையோடு சென்று கொண்டிருக்கிறார். விடியற்காலை 3 மணி அளவில் மதுரை மாநாட்டிலே கலந்துகொண்டவர் பேருந்து ஒன்றைப் பிடித்து, அதிலே வந்து சேர்ந்து தன் வீட்டிற்கு நடந்தே செல்லும் அந்தக் காட்சியைப் பார்த்து நாங்கள் அவரை அணுகி "வாருங்கள் காரிலே கொண்டு போய் விட்டு விட்டுப் போகிறோம்" என்று அழைத்தும்கூட, "இல்லை தம்பி, நான் போகிறேன். எனக்கு இது பழக்கமாகிவிட்டது, நீ போ" என்று சொன்னார். அந்த அளவிற்கு ஒரு எளிய வாழ்க்கையை தான் வாழ்ந்து காட்டி மற்றவர்களும் அதைப் பின்பற்ற வேண்டுமென்ற உணர்வை உருவாக்கிய உத்தமர் அண்ணன் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களாவார்கள்.

# நூற்றாண்டு நிறைவு விழா

நான் தந்தை பெரியார் அவர்களுடைய உரையை, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உரையை, தளபதி கே.வி. அழகிரிசாமி அவர்களுடைய உரையை, அண்ணன் விசுவநாதம் அவர்களுடைய உரையைக் கேட்டு இந்த இயக்கத்திலே என்னை ஆட்படுத்திக் கொண்டவன். எனவே, இன்றைக்கு உங்கள் முன்னால் நான் நிற்கிறேன் என்றால் என்னை உருவாக்கியவர்களிலே ஒருவர் மறைந்த – நம் நெஞ்சில் நிறைந்துள்ள கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் என்பது பெரும் உண்மையாகும். ஏதோ இன்றைக்கு நூற்றாண்டு விழாவிலே சொல்கின்ற வார்த்தைகள் அல்ல. அவரை வைத்துக் கொண்டே பல விழாக்களில் இதை நான் சொல்லியிருக்கிறேன்.

அவருடைய பெருமைகள் இங்கே தொகுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. பி.டி.ஆர். பேசும்போது ஒரு விழாவிற்கு அவர் மதுரை பேருந்து நிலையத்திலே இறங்கி நடந்தே விழா மேடைக்கு வந்தாரென்று குறிப்பிட்டார். பேருந்து பயணம் செய்தே கூட்டங்களுக்குச் செல்வாரென்று நண்பர் ராஜாராம் குறிப்பிட்டார். ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல விரும்புகிறேன்.

### பெரியாரிடமிருந்து பிரிந்து சென்றாலும் கொள்கைகளை இழந்து செல்லாதவர்

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு மதுரையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரு

### நினைத்து நினைத்துப் பின்பற்றக்கூடிய அறிவுரை பொதிந்த நகைச்சுவை

அவருடைய நகைச்சுவை அறிவுசார்ந்த நகைச்சுவையாக இருக்கும். அண்ணா குறிப்பிடுவதைப் போல சில நகைச்சுவை தடுக்கி விழுந்து அதைப் பார்த்துச் சிரிக்கின்ற நகைச்சுவையாக இருக்கும். சில நகைச்சுவை ஒருவரை குப்புறத் தள்ளிவிட்டு அவன் விழுந்ததைப் பார்த்து கைதட்டிச் சிரிக்கின்ற நகைச்சுவையாக இருக்கும். ஆனால் அண்ணன் விசுவநாதம் அவர்களுடைய நகைச்சுவை நினைத்து நினைத்து பின்பற்றக்கூடிய அறிவுரை பொதிந்த நகைச்சுவையாக இருக்கும்.

ஒருமுறை அவர் சொன்னார். ஒரு திருமணத்திற்கு அவர் தலைமை வகித்தார். திருமண விழா முடிந்து பிறகு ஒரு திங்கள் கழிந்து அந்த மணமகன் ஒரு கடிதம் அவருக்கு எழுதியிருந்தான். நீங்கள் முன்னின்று செய்து வைத்த திருமணத்திலே அமர்ந்திருந்த மணமகள் என் மனைவி என்னிடத்திலே செம்மையாக நடந்துகொள்ளவில்லை, இதற்கு உங்களுடைய அறிவுரை என்ன என்று கேட்டு கடிதம் எழுதினான். இவர் ஒரு மேடையிலே சொன்னார். முதலில் அவனுக்கு எட்டு எழுத்திலே ஒரு அறிவுரை சொன்னேன். அதற்குப் பிறகும் அவனிடமிருந்து ஒன்றும் பயனில்லை என்று கடிதம் வந்தது. மறுபடியும் ஏழு எழுத்திலே ஒரு அறிவுரை சொன்னேன். மீண்டும் ஒரு கடிதம். அதிலும் பயன் இல்லை என்று வந்தது. இறுதியாக ஆறு எழுத்திலே ஒரு அறிவுரை சொன்னேன் என்று கூறிவிட்டு அந்த எழுத்துக்களுக்கான அந்த வார்த்தைகள் என்ன என்பதையும் அவரே விளக்கினார்.

முதலிலே அவர் தெரிவித்த எட்டு எழுத்து அறிவுரை – ''அரவணைத்து நட'' என்பதாகும். அதிலே அவன் பயனில்லை என்றதும் அடுத்து இவர் தெரிவித்த ஏழு எழுத்து அறிவுரை –"அடக்கிப் பார்" என்பதாகும். அதிலும் பயனில்லை என்று அவன் எழுதியதும் இறுதியாக அவர் தெரிவித்த ஆறு எழுத்து அறிவுரை அப்படியானால் ''அடங்கிப்போ'' என்று அவர் அந்தக் கூட்டத்திலே தெரிவித்தார். இது நகைச்சுவை மாத்திரமல்ல, இப்படித்தான் வாழ்க்கை இருக்க வேண்டும். சில பேர் சொல்லாமல் இருப்பார்கள், சிலர் சொல்வார்கள். அவன் துணிந்து சொல்லிவிட்டான். சொன்ன காரணத்தால் அந்த அறிவுரையைப் பெற்று வாழ்க்கையை அவன் செம்மைப்படுத்திக் கொள்ள வழி பிறந்தது என்று தான் நானும் கருதுகிறேன்.

## அண்ணா சொல்லிச் சொல்லி மகிழ்ந்த கி.ஆ.பெ.வின் நேர்மை

அவர் எப்படிப்பட்டவர் என்பதற்கு அண்ணா அடிக்கடி வியந்து வியந்து ஒரு நிகழ்ச்சியைச் சொல்வார். கி.ஆ.பெ. அவர்கள் வர்த்தக சபைக்கும் தலைவர். திருச்சி மாவட்டத்திலே உள்ள தமிழ்ச் சங்கத்திற்கும் அவரே தலைவர். தமிழ்ச் சங்கத்திலே ஒரு விழா நடைபெறுவதாக இருக்கும். தமிழ்ச் சங்கத்தின் தலைவர் விசுவநாதம் அவர்கள், வர்த்தக சபைத் தலைவர் விசுவநாதம் அவர்களுக்கு கடிதம் எழுதுவார். நாங்கள் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக பாரதிதாசனை அழைப்பதாக இருக்கிறோம். அதற்கு நிதி தேவை, நிதி வழங்குங்கள் என்று கடிதம் எழுதுவார். இரண்டு சங்கமும் ஒரே வீட்டில்தான் இயங்கும். தமிழ்ச் சங்கத்தின் சார்பில் எழுதப்படும் கடிதத்தை தமிழ்ச் சங்கத் தலைவருக்கு அனுப்புவார். அது சென்று திரும்பி மீண்டும் அந்த வீட்டிற்கு வந்து இவரே அதை வாங்கிக் கொள்வார். கணக்கு பார்ப்பதில் அவ்வளவு நேர்மையானவர் அவர் என்று அறிஞர் அண்ணா அவர்கள் பல நேரங்களிலே எங்களிடத்திலே சொல்லிச் சொல்லி மகிழ்ந்திருக்கிறார்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனுடைய முதல் கவிதைத் தொகுப்பு பற்றி அருமை நண்பர் ராஜாராம் இங்கே குறிப்பிட்ட போதிலும் முழுமையாக அதைச் சொல்லவில்லை. அதற்கு அணிந்துரை எழுதியவர் அண்ணன் கி.ஆ.பெ. அவர்கள். அந்த அணிந்துரையிலே எழுதுகிறார் – "பாடலுக்காக ஒரு முறை படித்தேன். பாட்டிலே உள்ள பகுத்தறிவு மணத்திற்காக ஒரு முறை படித்தேன், கவிதைக்காக ஒரு முறை படித்தேன், கருத்துக்காக ஒரு முறை படித்தேன், ஒவ்வொரு முறையும் இது படித் தேனாகவே சுவைத்தது" என்று படித்தேன், படித்தேன், படித்தேன் என்ற சொற்றொடரையே வைத்து அந்தக் கவிதைகளின் சுவையைக் குறிப்பிட்ட அந்த அழகு இருக்கிறதே – அது யாரும் எதிர்பார்க்க முடியாது. பிறகு என் அருமை நண்பன் கவிஞர் கண்ணதாசன் ஒரு பாடல் "பார்த்தேன் – சிரித்தேன்" என்று எழுதினாரே, அது கூட அண்ணன் விசுவநாதம் அவர்கள் எழுதிய அந்த அணிந்துரையின் தாக்கம்தான். தம்பி மன்னர் மன்னன் பாரதிதாசனின் மகன் கூட இங்கே வந்திருக்கிறார். எனவே இப்படி பலருக்கு வழிகாட்டக் கூடிய அளவிற்கு சொல்லாட்சியை நடத்தியவர் நம்முடைய அண்ணன் கி.ஆ.பெ. அவர்கள் ஆவார்கள்.

## அந்தக் காலத் தலைவர்களின் ஓர் அரிய வரலாற்று அத்தியாயம்

அந்தக் காலத்திலே எப்படி தலைவர்கள் இருந்தார்கள் என்பதற்கு அவருடைய வாழ்க்கையிலே ஒரு பெரிய நிகழ்ச்சி. சென்னையிலே ஒரு விழாவிலே பேசிய மறைமலை அடிகள் நாத்திகத்தின் மீது ஏற்பட்ட ஆத்திரத்தின் காரணமாக "கடவுள் இல்லை என்று சொல்கின்ற நாத்திகர்களும் உயிரோடு இருக்கிறார்கள்.

---

மழையானது மக்கள் போற்ற வேண்டிய ஒன்று. ஏனெனில் அது உண்ணும் பொருள்களை உண்டாக்கிக் கொடுத்துத் தானும் உணவாக மாறுகிறது. பெரியோர்களைப் போற்றுங்கள். மனைவி மக்களோடு வாழுங்கள். விருப்பு, வெறுப்பு அற்று வாழுங்கள். இது ஒரு தொகுப்பு.

'படி, படிக்க வேண்டியவைகளைப் படி! குற்றமறப் படி; படிக்காவிட்டாலும் கேள்; படித்து, கேட்டு அறிந்தபடி நட' இது ஒரு தொகுப்பு.

'சூதாடாதே! பொய் சொல்லாதே! புலால் உண்ணாதே! கள் குடியாதே! களவு செய்யாதே! வஞ்சகம் கொள்ளாதே! தீயன எண்ணாதே!' இது ஒரு தொகுப்பு.

''நட்புத் தேவை; அதை ஆராய்ந்துகொள்! தீயவர் உறவை நோயென விலக்கு! பெரியோரைத் துணைக் கொள்! பிறரோடும் அன்பாயிரு! மனைவியை மதி! மக்களைப் பெறு! அறிவை அடை! சொல்வதெல்லாம் நல்லதாக இருக்கட்டும்! செய்வதெல்லாம் திறமையாக இருக்கட்டும்! அறத்தின் வழி நின்று பொருளைத் தேடி இன்பத்தைப் பெறு!

இவைதான் வள்ளுவருடைய கொள்கை. அதைத்தான் நீங்கள் திருக்குறளில் பார்க்க முடியும். இது எந்த நாட்டிற்கு, எந்த மக்களுக்கு, எந்த நிறத்தினருக்கு, எந்த மொழியினருக்கு, எந்தச் சமயத்தினருக்கு வேறுபாடு உடையது? இராது! அவ்வளவு பெரிய உயர்ந்த கருத்துக்களைக் கொண்டவர் வள்ளுவர்.

– முத்தமிழ்க் காவலர்
கி.ஆ.பெ. விசுவநாதம்

## எவ்வளவு மகிழ்ச்சி



தமிழர் திருநாளை ஓர் வெற்றித் திருநாள் எனலாம். ஏன் இது வெற்றித் திருநாளாகக் கருதப்படுகிறது? புதிய நெல் விளைந்து அரிசியாகிவிட்டது. கரும்பைச் சாறாக்கிச் சர்க்கரை காய்ச்சியாகி விட்டது. இரண்டையும் சேர்த்துப் பொங்கிச் சாப்பிடுகிறோம். உழைப்பின் முழுப்பயனை இன்று பெறுகிறோம். மஞ்சளும், இஞ்சியும், வானுயர் கரும்பும் எல்லாம் விளையும் காலம். வீடு புதிதாகிறது. ஆளும் புதியவனாக மாறுகிறான். எங்கும் புதிய நெல், புதிய பானை, புதிய உடை, புதிய மலர், புதிய வளை, புதிய இல்லம் காணப்படுகின்றது. இதைப் பார்த்துத் தமிழ் மக்கள் இந்நாளை இயற்கையோடு இயங்கும் திருநாளாகக் கருதி, திருவள்ளுவர் ஆண்டின் தொடக்க நாளாகவும் எண்ணிக் கொண்டாடுகிறார்கள். நாமும் இந்நாளை இன்று சாதி, மத, அரசியல், கட்சி வேறுபாடுகளின்றிக் கூடிக் கொண்டாடுகின்றோம். இதில் எவ்வளவு மகிழ்ச்சியிருக்கிறது!

– முத்தமிழ்க் காவலர் **கி.ஆ.பெ. விசுவநாதம்**

நாமும் அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்" என்று சொல்லிவிட்டார்.

மறைமலை அடிகள் தமிழ்க் கடல், அவரே பொறுமையிழந்து இவ்வாறு ஒரு கூட்டத்திலே பேசி விட்டார். உடனடியாக தண்டபாணிப் பிள்ளை என்ற அந்தக் காலத்திலே இருந்த நாடறிந்த தலைவர்களில் ஒருவர் – சுயமரியாதை இயக்கத்தின் காவலர்களில் ஒருவராகிய ஜெ.எஸ். கண்ணப்பர் ஆகிய இருவரும் மறைமலை அடிகளார் மீது – அவருடைய பேச்சு பெரியாரைக் கொலை செய்ய தூண்டுகின்ற பேச்சு என்று கூறி வழக்கு போட்டு விட்டார்கள். இதைப் பற்றி பத்திரிகைகள் எல்லாம் எழுத ஆரம்பித்து விட்டன. மேடைகளிலும் பேசத் தொடங்கி விட்டார்கள்.

பெரியார் அவர்கள் அப்போது ஈரோட்டிலே குடியரசு பத்திரிகையை நடத்திக் கொண்டிருக்கிறார். அந்தக் குடியரசு பத்திரிகையிலே பெரியார் இதைப் பற்றி எழுதப் போகிறார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் அண்ணன் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் ஓடோடிச் சென்றார் ஈரோட்டிற்கு பெரியார் எழுதியிருந்த தலையங்கத்தைப் பார்த்தார். "அய்யா, இப்போது இதை வெளியிட வேண்டாம், நான் சென்னை சென்று மறைமலையடிகளைப் பார்த்துவிட்டு வருகிறேன்; நான் திரும்புகிற வரையிலே இது பத்திரிகையிலே வர வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டு சென்னைக்கு ஓடோடி வந்தார். வந்து மறைமலை அடிகளைப் பார்ப்பதற்கு முன்பு தமிழ்த் தென்றல் திரு.வி.க.வைப் பார்த்தார். திரு.வி.க. அவர்களும் இவரும் சேர்ந்து மறைமலையடிகளாரின் இல்லத்திற்குச் சென்று – இப்படி நீங்கள் பேசி விட்டீர்களே, சரியல்லவே, இருந்தாலும் பரவாயில்லை, "நான் பேசியதற்கு பொருள் அதுவல்ல" என்பது போல ஒரு அறிக்கை கொடுத்து விடுங்கள் என்று கேட்டார்கள்.

அந்தப் பெரிய மனிதர் – பேருள்ளம் படைத்த அந்த தமிழ்த் தகைமையாளர் – உடனடியாக தாளை எடுத்து "நான் பெரியாரை அந்த எண்ணத்திலே தாக்கிப் பேசவில்லை; கொள்கை அடிப்படையிலேதான் பேசினேனே தவிர கொலைவெறியைத் தூண்டுகிற வகையிலே நான் பேசவில்லை; பேசியதாக யாராவது கருதினால் அதற்காக நான் வருந்துகிறேன்" என்று எழுதிக் கொடுத்து விட்டார்.

இந்தக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு அண்ணன் விசுவநாதம் அவர்கள் ஈரோட்டிற்குச் சென்று பெரியாரிடம் அதைக் கொடுத்தார். பெரியார் அந்தக் கடிதத்தைப் பெறுவதற்கு முன்பே விடுதலைப் பத்திரிகையில் ஜெ.எஸ். கண்ணப்பர் கொஞ்சம் அவசரப்பட்டு பெரியாரிடத்திலே மறைமலை அடிகள் மன்னிப்பு கேட்டார் என்று தலைப்பு போட்டு ஒரு தலையங்கம் எழுதி விட்டார். இதை அறிந்த பெரியார் உடனடியாக அந்தத் தலையங்கத்தை நிறுத்தச் சொல்லியும் கூட முடியாமல் அந்தத் தலையங்கம் வெளியாகி விட, மறுநாள் தந்தை பெரியார் – இப்படி ஒரு தலையங்கம் வெளியானதற்காக வருந்துகிறேன். மறைமலை அடிகளாரிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் என்று அவர் ஒரு தலையங்கம் எழுதினார்.

அது அப்படிப்பட்ட தலைவர்கள் வாழ்ந்த காலம். நாமும் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எப்படிப்பட்ட காலம் இது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காக இதைச் சொல்கிறேன். அந்தக் காலத்தில் நாம் வாழ்ந்தோம். நான் இன்றைக்கும் கருதிப் பார்க்கிறேன். இந்தக் காலத்தை எண்ணிப் பார்க்கும்போது அந்தக் காலத்தோடு அவர்களுடைய அத்தியாயத்தோடு நம்முடைய அத்தியாயம் முடிந்திருக்கக் கூடாதா என்று எண்ணுகின்ற அளவிற்கு இந்தக் காலம் கடைகெட்ட காலமாகப் போயிருக்கிறதை எண்ணிப் பார்க்கிறேன்.

இருந்தாலும் அண்ணன் விசுவநாதம் போன்றவர்கள் உருவாக்கிய அந்த உணர்வு. அந்தத் துணிவு, அவர்கள் ஏற்படுத்திய அந்தப் பண்பாடு என்ற அடிப்படையிலே பெரியாருடைய அடிப்படைக் கொள்கைகளை, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழிகாட்டுதலை ஏற்றுக்கொண்டு அண்ணன் விசுவநாதம் அவர்களுடைய அந்த மனப்பான்மையை நாமும் பெற்று மனித நேயத்தை வளர்ப்போம். தமிழ் நிலத்தை வளர்ப்போம். இங்கே நான் வருவதற்கு முன் சொல்லப்பட்ட ஒரு வேண்டுகோளை இங்கே நம்முடைய ஆர்.எம்.வீ. அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது நிச்சயமாக நிறைவேற்றப்படும் அதாவது அண்ணன் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களுடைய பெயரால் அரசின் சார்பில் ஆண்டுதோறும் ஒரு விருது வழங்கப்படும் என்பதை இங்கே அறிவித்து விடைபெறுகிறேன்.

***– கி.ஆ.பெ. விசுவநாதம் நூற்றாண்டு விழாவில் 16–11–1999 அன்று முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.*** □



# மலை உலா!

□ கவிஞர் எழிற்பித்தன்

அடடா! எங்கும் மலையழகு – வழியும்
அருவிகள் என்றும் தனியழகு,
குடையாய் விரியும் மரங்களிலே – எங்கும்
குலுங்கிச் சிரிக்கும் பூவழகு!

நடந்தால் தென்றல் தொடுமழகு – புது
நயங்கள் மாறாக் கனியழகு,
கிடந்தால் தெரியும் நிலவழகு – ஒளிக்
கீற்றாய் விரியும் கலையழகு!

அடர்ந்தக் காட்டு வழியினிலே – எங்கும்
அணைக்கும் குயிலின் பாட்டழகு.
தொடர்ந்தால் மயிலின் நடையழகு – அது
தோகை விரிக்கும் விழியழகு!

தடந்தோள் தேக்கு மரமழகு – எங்கும்
தழைக்கும் சந்தன மணமழகு,
வடிந்தால் தேனின் சுவையழகு – மண்ணின்
வயிரப் பந்தல் கொடியழகு!

குடைந்தால் பாயும் முயலழகு – ஒரு
குன்றாம் யானைப் படையழகு
கடிந்தே சினக்கும் புலிசிங்கம் – என்றும்
ஒளிந்தே காணல் நமக்கழகு!

ஒடிந்த விறகுச் சுள்ளிகளை – நாளும்
ஒன்றாய்க் கட்டிச் சுமக்கின்றார்
விடியல் காண வேண்டுமிவர் – என்னும்
விழைவே மாந்தர் உறவழகு! □



# குழந்தைகள் தினம்

- மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்
திருமதி. எஸ்.பி. சற்குணப்பாண்டியன்

14-11-1999 அன்று வானொலியில் ஆற்றிய உரை.


ஆசியாவின் ஜோதி, மனிதருள் மாணிக்கம், உலக சமாதான தூதுப்புறா பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்தநாளான நவம்பர்—14 குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிறது. குழந்தைகள் நன்மையுற தமிழக அரசு ஆற்றிவரும் பணிகள் பற்றி கூறிட விழைகின்றேன்.

நாட்டின் குடிமக்களாகிய குழந்தைகளின் நலனிற்கு முக்கியத்துவம் அளிக்காத எந்த நாடும் வளர்ச்சி நோக்கி முன்னேற இயலாது.

6 மாத கைக்குழந்தை முதல் 10ம் வகுப்பு வரை பள்ளிசெல்லும் நலிவுற்ற குடும்பத்து சிறுவர்—சிறுமியருக்கு சத்துணவு வழங்கி, சுகாதாரம் மற்றும் உடல், மன வளர்ச்சிக்கான தேவைகளையும் கருத்தாகக் கவனித்து, முறைசாரா முன்பருவக் கல்வி வழங்கி, மருத்துவ சோதனை செய்து, நோய் தடுத்து நலம் சேர்ப்பது போன்ற பணிகளை தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் மூலமும், உலக வங்கி உதவியுடன் செயல்படும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மூலமும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் மூலமும் நிறைவேற்றி வருகிறது.

மேற்கூறிய திட்டங்களின் மூலமாக 69,530 மையங்களில் 73,88,570 குழந்தைகள் பயன்பெறுகின்றனர். இவர்கள் அனைவருக்கும் வாரம் ஒரு முட்டை வழங்கப்படுகிறது.

5 வயது முதல் 18 வயது வரை உள்ள ஆதரவற்ற, கைவிடப்பட்ட குழந்தைகள் நலத்திற்காக அரசு நடத்தும் 25 பராமரிப்பு இல்லங்களில் 5,500க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு உணவு, உடை, உறைவிடம், கல்வி, மருத்துவ வசதி, பாடநூல்கள், குறிப்பேடுகள், காலணிகள் மற்றும் படுக்கை வசதிகள் தரப்படுகிறது.



தமிழ்நாட்டில் திருக்கோயில்களின் சார்பில் இயங்கும் 43 கருணை இல்லங்களில் 1,438 குழந்தைகள் தங்கி பயில்கிறார்கள்.

187 தனியார் தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் உள்ள 10,000க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு உணவு, உடை போன்றவற்றிற்காக வருடத்திற்கு ரூ.3 கோடி மான்யமாக அரசு வழங்குகிறது. வேலை செய்யும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கு 212 காப்பகம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் இயங்கி வருகிறது. இவற்றின் பராமரிப்பிற்காக தமிழக அரசு ரூ.54 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

தொழுநோயால் அவதியுறும் ஏழை நோயாளிகளின் குழந்தைகளுக்கும் 10 அரசு இல்லங்களில் தங்கி பயில வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பார்வையற்றோர், பேசும் திறனற்று காது கேளாதோர், கை, கால் ஊனமுற்றோர், மனவளர்ச்சி குன்றியோர் என ஊனமுற்ற 8,500 குழந்தைகளுக்கென அரசு 23 சிறப்புப் பள்ளிகளை நடத்தி வருகிறது. 57 தனியார் தொண்டு நிறுவன ஊனமுற்ற பள்ளிகளுக்குப் பராமரிப்பு மான்யம் அரசு வழங்குகிறது. 12,000 ஊனமுற்ற மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை மாதம் ரூ.25 முதல் ரூ.195 வரை வழங்கப்படுகிறது.

முதன்முறையாக, ஒரு புதிய முயற்சியாக சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும்

மாணவ, மாணவியரிடையே ஊனமுற்றோரைக் கண்டறியும் கணிப்பு முகாம் கடந்த மார்ச் மாதம் நடத்தப்பட்டது. அவர்களுக்குக் கல்வி உதவித் தொகை, உதவிக் கருவிகள் வழங்கப்பட உள்ளன.



1986ஆம் ஆண்டில் இளைஞர் நீதிச் சட்டத்தின் கீழ் அமைந்த 11 அரசு கூர்நோக்கு இல்லங்களிலும், தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் 7 கூர்நோக்கு இல்லங்களிலும் வழி தவறி, ஆதரவிழந்த நிலையில் வந்த சிறார்களைப் பாதுகாத்து அவர்களுக்கு உணவு, உடை, உறைவிடம், கல்வி மற்றும் தொழிற்கல்வி முதலியன இலவசமாக வழங்கப்படுகின்றன.

இளைஞர் நலக்குழுமங்கள் மற்றும் இளைஞர் நீதிமன்றங்களினால் கல்வி மற்றும் நன்னெறிப் பயிற்சிக்கென இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களுக்கு அனுப்பப்படும் சிறார்களுக்கென 24 இலலங்கள் உள்ளன.

வறுமையின் காரணமாக இளைஞர் இல்லங்களுக்கு அனுப்பப்படும் சிறுவர்களை மீண்டும் பெற்றோரிடம் ஒப்படைத்து அவர்களுக்குக் கல்வி தர, உடல்நலம் பாதுகாக்க ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100 வீதம் 100 பேருக்கு வழங்கப்படுகிறது.

பிச்சையெடுக்கும் பழக்கத்திலிருந்து சிறார்களை விடுவித்து மறுவாழ்வு அளிக்கும் வகையில் அரசின் மான்ய உதவியுடன் இந்திய குழந்தைகள் நலச்சங்கத்தில் இளைஞர் வழிகாட்டி நிலையம் ஒன்று இயங்கி வருகின்றது.

சாலையோர குடும்பத்துச் சிறார்கள் சமூக விரோதிகளிடம் கட்டாய தொடர்பு ஏற்பட்டு குற்றவாளிகளாக மாறாமல் பாதுகாக்க தமிழக அரசு மற்றும் இந்திய அரசின் மான்ய உதவியுடனும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் புகலிடங்களை நடத்தி வருகின்றன. அங்கு 2,600 குழந்தைகளுக்கும் முறைசாராக் கல்வி, தொழிற்கல்வி மற்றும் ஒரு வேளை உணவு இலவசமாக வழங்கப்படுகிறது.

துன்புறும் சூழ்நிலையில் உள்ள குழந்தையோ அல்லது குழந்தைகள் துன்புறும் சூழலைக் காண நேரும் எந்த நபரும் 1098 என்ற எண்ணுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம். இது நாடு முழுவதற்கும் பொதுவான தொலைபேசி எண்ணாகும். இதற்கு கட்டணம் கிடையாது. இந்திய குழந்தைகள் நலச்சங்கமும், டான்பாஸ்கோ அன்பு இல்லமும் 24 மணி நேரமும் இதற்காக இயங்குகின்றன.

பிறந்த பெண் சிசு வேண்டாம் என்று நினைப்பவர்களோ அல்லது பிறந்த குழந்தை தகுந்த பராமரிப்பின்றி தனியே காணப்பட்டாலும் சேலத்தில் உள்ள அரசு தொட்டில் குழந்தைகள் இல்லத்திலோ, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களிலோ, அரசு பொது மருத்துவமனைகளிலோ, மாவட்ட ஆட்சியரிடமோ, மாவட்ட சமூகநல அலுவலரிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட 17 தத்து கொடுக்கும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடமோ தெரிவித்தால் அவர்கள் நேரடியாக வந்து குழந்தைகளை எடுத்துச் சென்று பராமரிப்பர். குழந்தைபேறு இல்லாத தகுதியுள்ளவர்கட்கு தத்து (ம) பராமரிப்புச் சட்டத்தின் கீழ் அக்குழந்தைகள் தத்து கொடுக்கப்படுகின்றனர்.

ஆண் குழந்தை இல்லாத, ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தை உள்ள 40 வயதிற்குட்பட்ட தாய் கருத்தடை செய்து கொண்டால் தமிழக அரசின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் பயனடையலாம். இத்திட்டத்தில் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் மூலம் ஒரு பெண் குழந்தை இருந்தால் ரூ.3,000—ம், இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால் தலா ரூ.1,500—ம் முதலீடும் செய்யப்படுகிறது. அப்பெண்ணுக்கு 20 வயது முடியும் தருவாயில் உத்தேசமாக ரூ.58,000—ம், ரூ.29,000—ம் முறையே கிடைக்கும்.

கடந்த கால ஆட்சியில் பதிவு செய்து நிதி முதலீடு செய்யாமலிருந்த குழந்தைகள் 26,905 குழந்தைகளுக்கும் சேர்த்து இதுவரை இத்திட்டத்தின் கீழ் 68,124

குழந்தைகளுக்கு தமிழக முதல்வர் கலைஞர் ரூ.10 கோடி முதலீடு செய்துள்ளார்.

ஏழை விதவையரின் குழந்தைகளுக்கும் புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள் மற்றும் உதவித்தொகை ரூ.50 முதல் ரூ.600 வரை வழங்கப்படுகிறது.

14 வயது வரை அனைத்து சிறார்களுக்கும் கட்டாயக் கல்வி அளிக்க வாழ்வொளித் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. 'மலைவா ழையல்லவோ கல்வி' என்று பாவேந்தர் கூற்றுப்படி இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

அரசு பொறுப்பேற்ற பிறகு 1 முதல் 5 வரை பயிலும் மாணவ மாணவியர் அனைவருக்கும் இலவச பாட புத்தகங்கள் வழங்கவும், பிளஸ் 2 வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் மாநிலப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவச பயணம் செய்யவும் 17,61,000 பேர் அனுமதிக்கப்பட்டனர். கல்லூரி மாணவர்களுக்கு 50% இலவச பஸ்பாஸ் வழங்கப்படுகிறது. இதனால் 1,49,000 மாணவர்கள் பயனடைகிறார்கள்.


மாவட்ட அளவில் 10, 12ம் வகுப்புத் தேர்வுகளில் முதல் மூன்று மதிப்பெண்கள் பெறும் மாணவ மாணவியர்களுக்கு உயர்கல்விச் செலவை அரசே ஏற்கிறது.

1997ல் கிராமப்புற மாணவர்களுக்கு தொழிற்கல்வியில் 15% இட ஒதுக்கீடும் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களுக்கு சத்துணவுக்காக 532 கோடி ரூபாயும், இலவச பேருந்து பயண அனுமதிக்காக 80 கோடி ரூபாயும், இலவச சீருடைக்காக 56 கோடி ரூபாயும், இலவச பாட புத்தகங்களுக்காக 25 கோடி ரூபாயும், சத்துணவு சாப்பிடும் சிறார்களுக்கு வாரம் ஒரு முட்டை வழங்குவதற்காக 35 கோடி ரூபாயும், படிப்பு உதவித்தொகையாக 85.14 கோடி ரூபாயும் தமிழக அரசு வழங்குகிறது.

1991ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 5 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் 5 லட்சம் பேர் அனைத்து தொழில்களிலும் வேலை செய்வது கண்டறியப்பட்டது. இது மிகவும் வருத்தத்திற்குரியது. கண்டனத்திற்குரியது.

22 மாவட்டங்களில் குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலநிதி சங்கம் துவக்கப்பட்டுள்ளது. குழந்தைத் தொழிலாளர்களை தொழிலில் ஈடுபடுத்திய நிறுவனங்கள் மீது, தொழிலாளர் நலத்துறையின் மூலமாக வழக்கு தொடரப்படுகிறது. மீட்கப்பட்ட குழந்தைகளுக்கு கல்வியறிவு புகட்ட ரூ.20,000 குழந்தையின் பேரில் அந்நிறுவனம் முதலீடு செய்ய வலியுறுத்தப்பட்டுள்ளது.



குழந்தைகளின் கால்கள் வலுவிழந்து போகாவண்ணம் போலியோ தடுப்பு சொட்டு மருந்து தமிழகம் முழுவதும் சுமார் 65 இலட்சம் குழந்தைகட்கு 4 முறை இலவசமாக வழங்கப்படுகிறது.

எதிர்காலத்தில் தமிழகத்தை ஏற்றமுடைய வளநாடாக கண்டிட இனிய குழந்தைகளை ஒழுக்கமுடையோராக, ஆரோக்கியம் மிகுந்தவராக, கல்வியில் சிறந்தவராக, மனிதநேயம் கொண்டவராக உருவாக்கிடுவோம்.

எந்தக் கவலையும் இல்லாமல் பட்டாம்பூச்சிகளாய் திகழும் குழந்தைச் செல்வங்களே நாளைய பாரதத்தினை தாங்கிப் பாதுகாக்கும் பலமிக்க சிங்கங்களாவீர்.

# கலைமாமணி விருது

**கலைமாமணி விருது வழங்கும் விழாவில் 20-11-1999 அன்று முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.**

இந்த விழா ஆண்டுதோறும் அரசின் சார்பிலும் இயல் இசை நாடக மன்றத்தின் சார்பிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த நிகழ்ச்சியிலே விருது பெற்றவர்களுக்கு அவர்களுடைய வாழ்வில், கலைத்துறை வளம் மேலும் பெருகிட வேண்டும் என்ற வகையிலே அன்பான வாழ்த்துக்களை நீண்டகால கலையுலக பிரதிநிதியாக விளங்குகின்ற தம்பி சிவக்குமார் அவர்கள் இங்கே வழங்கியிருக்கின்றார். கலைவித்தகர் சார்பில் விருது பெற்றவர்களுக்காக என்னுடைய அன்பு மகன் பிரபு தன்னுடைய நன்றியை தெரிவித்திருக்கிறார். அதைப்போலவே தம்பி அர்ஜுன் மற்றவர்கள் சார்பாக தன்னுடைய நன்றியைத் தெரிவித்திருக்கின்றார். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும், கலைமாமணி விருது பெற்றதற்காக நன்றி தெரிவித்ததோடு, விருதுகளைப் பெற்ற அனைவரையும் வாழ்த்தி அமர்ந்திருக்கின்றார்.

**பெயரைத் தமிழாக்கிய போது இயலும் சேர்ந்து கொண்டது**

இந்த மன்றம் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என்று இன்றைக்கு அழைக்கப்படுகின்றது. இது தொடங்கிய போது சங்கீத நாடக சபா என்றுதான் தொடங்கப்பட்டது. இதனை தமிழாக மாற்ற வேண்டும் என்று எண்ணங்கொண்டு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என்று மாற்றினோம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைவதற்கு முன்னால் இருந்த பெயர் சங்கீத நாடக சபா என்பதாகும். சங்கீதம் என்றால் இசை, நாடகம் என்றால் நாடகம், சபை என்றால் தமிழில் மன்றம். இதை மாற்றிய நேரத்திலே ஒரு ஆதாயமாக இசை, நாடகம் என்ற இரண்டுடன் இயலும் இணைந்தது. இயலும் இணைந்த காரணத்தினால்தான் தவத்திரு குன்றக்குடி அடிகளார் போன்றவர்களையெல்லாம் சிறப்பிக்கக் கூடிய வாய்ப்பு எங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் ஆண்டு தோறும் நடைபெறுகின்ற இந்த இனிய விழாவில் ஒவ்வொரு ஆண்டும் ஐம்பது அல்லது அறுபது பேர் என்கின்ற கணக்கில் விருதுகளைப் பெறுகிறார்கள். சில பத்திரிகைகளிலே கூட கேலிச் சித்திரம் – ஐம்பது பேர், அறுபது பேர் என்பது அதிக எண்ணிக்கை என்பதைப்



போல – வீட்டுக்கு ஒருவருக்குக் கொடுத்து விடலாமே என்று வரையப்பட்டிருந்தது. வீட்டுக்கு வீடு கலைஞர்கள் இருக்கிறார்கள் என்றாலுங் கூட, கொடுப்பதற்கு இயலாத சூழ்நிலைதான் எங்களுக்கு இருக்கிறதே அல்லாமல் எல்லா வீட்டிலும் கலைஞர்கள் இருக்கிறார்கள். அந்தக் கலைஞர்களுக்கெல்லாம் தரவேண்டிய பொறுப்பும் கடமையும் அரசுக்கு இருக்கின்றது. ஒரே நாளில் ஒரே ஆண்டில் எல்லா கலைஞர்களுக்கும் கொடுத்து விட்டால் பிறகு ஆண்டு தோறும் விழா எடுக்க முடியாது என்பதற்காகத்தான் ஆண்டு தோறும் விழா எடுப்பதற்காக அவ்வப்போது ஐம்பது பேர், நூறு பேர் என்று இந்த விருதுகளை வழங்கிக் கொண்டிருக்கின்றோம். அத்தகைய விருதுகளைப் பெற்று எங்களை மகிழ்வித்து விருது வழங்குகின்ற பேறு எங்களுக்குக் கிடைக்குமாறு செய்த கலையுலக பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்க நான் கடமைப் பட்டிருக்கின்றேன்.




**ஒரு சவரனாக இருந்த கலைமாமணி பதக்கம் 3 சவரனாக உயர்ந்துள்ளது**

இந்த மன்றத்தின் சார்பில் வழங்கப்படும் ஒவ்வொரு விருதும் ஆண்டுதோறும் எடை கூடியிருக்கின்றது. மதிப்பும் கூடியிருக்கின்றது. அணிவிக்கப்பட்ட மாலையிலே கோக்கப்பட்ட பதக்கத்தின் எடை கூடியிருக்கலாம். ஆனால் விருது பெற்ற கலைஞர்களின் எடை எனப்படும் மதிப்பு அப்படியே தான் இருக்கின்றது. அதிலே எந்தவிதமான வேறுபாடும் கிடையாது. ஆனால் அரசாங்கத்தின் நிதிநிலை உயர உயர அதே நேரத்தில் எங்களுடைய உள்ள உணர்வுகளும் உயர்ந்து, உயர்ந்து அதன் காரணமாக சற்று எடை கூடிக்கொண்டே வருகின்றது.




குறிப்பாகச் சொல்ல வேண்டு மேயானால், இந்தக் கலைமாமணி விருதினை காங்கிரஸ் ஆட்சியிலே தான் தொடங்கினார்கள். செய்தவர்களை மறந்து விடக்கூடாது. அது அரசியல் நாகரிகமும் ஆகாது. கலைமாமணிகளுக்கு விருது அளிக்கின்ற இந்த நிகழ்வை காங்கிரஸ் ஆட்சியிலே தொடங்கிய போது ஒரு




சவரன் பதக்கம்தான் அணிவிக்கப்பட்டது. கழக ஆட்சியில் 1990–91ஆம் ஆண்டுகளில் இரண்டு சவரன் பதக்கமாக அது மாற்றப்பட்டது. 98–99இல் கடந்த ஆண்டிலிருந்து அதனை மூன்று சவரனாக உயர்த்தி வழங்கப்படுகிறது. 2000ஆம் ஆண்டு வந்த பிறகு மூன்று நான்காக ஆகலாம் – நிலைமைக்கேற்றபடி என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நலிந்தோருக்கான பொற்கிழி அடுத்த ஆண்டு ரூ.15 ஆயிரமாக உயரும்**

இதுவரையிலே கலைமாமணி விருது பெற்றவர்களின் எண்ணிக்கை 1062 என்பதை பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன். இந்த ஆண்டு மட்டும் விருது பெற்றோர் 54 பேர். அதே நேரத்தில் கலைமாமணி விருது பெற்றிருந்தாலும் அவர்களுக்கென்று மிக நலிவுற்ற நிலையிலே உள்ள பெரியவர்களின் குடும்பத்தினருக்கு 74–75ஆம் ஆண்டு முதல் கழக ஆட்சியில் ஆயிரம் ரூபாய் குடும்ப நிதியாக வழங்கப்பட்டது. 90–91ல் அது ஐந்தாயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. 94–95 முதல் பத்தாயிரம் ரூபாய் வீதம் அந்தப் பொற்கிழி வழங்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்வதோடு அடுத்த ஆண்டு இது பதினைந்தாயிரம் ரூபாயாக உயரும் என்பதையும் மகிழ்ச்சியோடு அறிவிக்க விரும்புகிறேன்.

அதைப் போல, சிறந்த கலை நிறுவனங்களுக்கு கேடயம் வழங்குகின்ற திட்டத்தையும் இந்த அரசு அறிமுகப்படுத்தி 73–74ஆம் ஆண்டு முதல் இதுவரையிலே 20 கலை நிறுவனங்களுக்கு அவர்களுடைய சிறப்பைப் பாராட்டி அரசின் சார்பில் கேடயம் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திலே அளிக்கப்படும் நிதி உதவி, அமைச்சர் தமிழ்க்குடிமகன் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல நலிந்த கலைஞர்களுக்காக ஏற்கனவே இது 100 ரூபாய் 200 ரூபாய் எனத் தொடங்கி 98–99இல் கடந்த ஆண்டு முதல் மாதந்தோறும் 500 ரூபாய் என்று உயர்த்தப்பட்டு இதுவரையிலே 5067 நலிந்த கலைஞர்கள் இந்த உதவித் தொகையைப் பெற்று வருகிறார்கள். இந்தத் தொகையும் மேலும் உயருமென்றாலுங்கூட நலிவு அடைந்தோர் தொகை உயரக் கூடாது என்ற கவலையோடு இந்தத் தொகை உயர்த்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நலிவுற்றவர்கள் கலையுலகத்தில் இருக்கிறார்கள் என்பதற்கு அடையாளமாகத்தான்



நம்முடைய சொக்கலிங்க பாகவதர் அவர்கள் கலை மாமணி விருதுபெற இங்கே காட்சி தந்தார்கள். இன்றைக்கும் அவரை படங்களிலே பார்க்கிறோம். இன்று பிற்பகலிலே கூட நான் பார்த்த ஒரு சின்னத்திரை படத்தில் சொக்கலிங்க பாகவதர் வந்து போனார். அந்தப் படம் புதிய படமாக இருந்தாலும் அல்லது புதிய சின்னத்திரை ஓவியமாக இருந்தாலும் அதைப் பார்க்கும் போது இன்னும் இவர் இருக்கிறாரா என்கிற ஆச்சரியத்தோடு பார்த்தால் இன்னும் இருப்பேன், இதே இளமையோடு இருப்பேன் என்று நமக்கெல்லாம் அவர் அறைகூவல் விட்டுக் கொண்டிருக்கிறார்.




என்னை அவர் இரண்டொரு முறை சந்தித்தார். ஒரு முறை சந்தித்தபோது எனக்கு எதுவும் தேவையில்லை தம்பி. ஒரே ஒரு வீடு என்று சொன்னார். வீடு படத்திலே நடித்தவர் அவர். எனவே வீடு என்றார். இன்று இந்த இனிய விழாவில் அரசின் சார்பில், அவருக்கு ஒரு வீடு வழங்கப்படும் என்பதையும் அதுவும் விரைவிலே வழங்கப்படும் என்பதையும் நான் மிகுந்த பூரிப்போடு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைச்சர்கள் வந்தாலே கோரிக்கை, அதிலும் முதல் அமைச்சர் கலந்து கொண்டால் ஒன்றும் விதிவிலக்கல்ல. கோரிக்கை நிச்சயமாக இருக்கும். அந்தக் கோரிக்கை இங்கே தம்பி பிரபு வந்த காரணத்தால் நினைவுபடுத்தப்பட்ட கோரிக்கை அல்ல. நம்முடைய தம்பி இராம. நாராயணன் அவர்களும் அவரைத் தொடர்ந்து தம்பி சிவக்குமார் அவர்களும் ஒருவர் முன் மொழிந்து இன்னொருவர் வழி மொழிந்தார்கள். அடுத்த ஆண்டிலிருந்து கலைஞர் விருது, சிவாஜி விருது வழங்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள்.





நான் உறுதி அளிக்கிறேன். அடுத்த ஆண்டு நடிகர் திலகம் சிவாஜி விருது வழங்கப்படும். கலைஞர் விருது என்ன வாயிற்று என்று கேட்கா தீர்கள். இரண்டு பேரையும் பிரிக்காதீர்கள். கலைஞர் விருது என்றாலே அதிலே சிவாஜி விருது அடங்கி யிருக்கின்றது. சிவாஜி விருது என்றால் அதிலே கலைஞர் விருது அடங்கியிருக்கின்றது. அடுத்த ஆண்டு முதல் நடிகர் திலகம் சிவாஜி விருது வழங்கப்படும் என்பதையும் தெரிவித்து, இந்த இனிய விழாவிலே உங்களை யெல்லாம் கண்டு மகிழ்ந்த தற்காக நன்றி கூறி விடை பெறுகிறேன்.

★ ★ ★

# மகிழ்ச்சியில் மலர்ந்தது மண்ணின் மாண்பு

# கலைஞர் ஆட்சியில் வேளாண் சிறப்பு





விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகள், பழங்கள் போன்ற விவசாய விளைபொருட்களை இடைத்தரகர்கள் குறுக்கீடு ஏதுமின்றி நுகர்வோர்க்கு விற்பனை செய்ய 100 இடங்களில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் 'உழவர் சந்தை'.

*"விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த காய்கறிகளுக்கு இடைத்தரகர்கள் இல்லாமல் தாங்களே விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்வதாலும், பஸ்ஸில் லக்கேஜ் இல்லாமல் இலவசமாக கொண்டு வருவதாலும், விவசாயிகளுக்கு இலாபகரமான விலை கிடைக்கும்.*

*உழவர் சந்தைகளில், விவசாயிகளிடமிருந்து பொதுமக்கள் நேரடியாக, நியாயமான விலையில், புத்தம் புதுக் காய்கறிகளை வாங்க இந்த சந்தை பயன்படும்".*


– முதலமைச்சர் கலைஞர்



இந்தியாவிலேயே முதன்முதலாக, விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்திட்டம் அறிவிக்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.




1996, 1997 ஆகிய 2 ஆண்டுகளில் ரூ.114.15 கோடி வெள்ள நிவாரணமாக வழங்கப்பட்டது.



நெல் கொள்முதல் விலை, மத்திய அரசின் நிர்ணய விலையை விட குவிண்டாலுக்கு ரூ.35 அதிகம்.



இயற்கைச் சீற்றத்தால் மாடு இறந்தால் ரூ.5,000, கன்று இறந்தால் ரூ.3,000, ஆடு இறந்தால் ரூ.1,000 என நிர்ணயம்.




கரும்பு பயிர்க்கடன் ஒரு எக்டேருக்கு ரூ.45,000–லிருந்து ரூ.55,000 ஆகவும், இதர பயிர்களுக்கு ஒரு எக்டேருக்கு ரூ.25,000–லிருந்து ரூ.35,000 ஆகவும் விவசாயக் கடன் தொகைகள் உயர்வு.



விவசாயிகளுக்குத் தகுந்த நேரத்தில் வரையறுக்கப்பட்ட விலையில் இரசாயன உரம் கிடைத்திடும் வகையில், உர அடையாள அட்டைகள் விநியோகம்.





யூரியா உர விற்பனை வரி 4%லிருந்து 2% ஆகக் குறைப்பு.




சென்னை – விமான நிலையத்திற்கு அருகில் ரூ.40.59 கோடியில், 'பன்னாட்டு மலர் ஏல மையம்' உருவாக்கப்படுகிறது.



காவிரி டெல்டா மாவட்டங்களில் வாய்க்கால்களில் நீர்வரத்தைத் தடுத்துச் சேதத்தை ஏற்படுத்தும் நெய்வேலிக் காட்டாமணக்குச் செடிகள் ரூ.3.93 கோடியில் அழிக்கப்பட்டன.



ரூ.13.57 கோடியில் மதுரையில், நெல் வணிக வளாகமும், ரூ.9.80 கோடியில் திருச்சியில், கரும்பு வெல்ல வணிக வளாகமும், ரூ.30.89 கோடியில் ஈரோட்டில், மஞ்சள் வணிக வளாகமும் உருவாக்கப்படுகின்றன.




உதகையில், 'மாதிரி மலரியல் மையம்' ஒன்று தொடங்கப்பட்டு, திசு வளர்ப்பு முறையில் உற்பத்தியாகும் அலங்காரச் செடிகள் விவசாயிகளுக்கு விநியோகம்.




பசுமைக்குடில் அமைக்கும் திட்டம், நறுமணப் பயிர்கள் உலர்த்திட பிளாஸ்டிக் விரிப்புகள் விநியோகம்.




சிறு மற்றும் மிகச் சிறிய விவசாயப் பண்ணை மகளிர்களுக்கு, புதிய வேளாண் தொழில்நுட்பப் பயிற்சியளிக்கும் தமிழ்நாடு பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம், 2002ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.



நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் ஓய்வூதியம் ரூ.100–லிருந்து ரூ.150 ஆக உயர்வு.




எட்டு மாவட்டங்களில், ரூ.4.05 கோடி ஒதுக்கீட்டில் 12,000 ஏக்கர் களர்–உவர் நிலம் சீர்திருத்தம்.




1996–97ஆம் ஆண்டில் 69.30 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த உணவு தானிய உற்பத்தி, 1997–98இல் 86.68 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்து, 1998–99இல் சுமார் 101.18 மெட்ரிக் டன்.

மன்னராட்சி காலத்திலிருந்து 100 ஆண்டுகளுக்குமேல் தூர் வாரப்படாத, காவிரி டெல்டாப் பகுதிகளில் ரூ.108 கோடி மதிப்பீட்டில் தூர் வாரும் பணிகள்.



மேலும், கடந்த மூன்றாண்டுகளில், ஏனைய மாவட்டங்களில் ரூ.21.75 கோடியில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

10,000 எக்டேர் தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்ற 'தரிசு நில மேம்பாட்டு ஆணையம்' உருவாக்கம்.



# கி.பி. 11-12ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பௌத்தப் பள்ளி

**– கு. தாமோதரன்**
இயக்குநர்,
தொல்லியல் துறை



திருச்சிராப்பள்ளி நகருக்கு தென் கிழக்கே 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கீழக்குறிச்சி என்ற ஊரில் கி.பி. 11–12ஆம் நூற்றாண்டைச் சார்ந்த புத்தர் சிற்பத்தையும், பௌத்தப்பள்ளி (கோயில்)க்கு அளிக்கப்பட்ட நிலக் கொடை பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டையும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கண்டு பிடித்துள்ளது.

கீழக்குறிச்சி கிராமத்தில் நா. கட்டையன் என்பவர் நிலத்தில் கல்வெட்டு பொறிக்கப்பட்ட தூண் ஒன்று காணப்படுவதாக அவ்வூரைச் சேர்ந்த திருவாளர்கள் போஸ், மாணிக்கம் ஆகியோர் தெரிவித்ததின் பேரில் தொல்லியல் துறையின் திருச்சிராப்பள்ளி அலுவலகத்தைச் சேர்ந்த பதிவு அலுவலர் கி.ஸ்ரீதரன், ஸ்தபதி வே.இராமன், அலுவலக உதவியர் இராசேந்திரன் ஆகியோர் சென்று ஆய்வு செய்து கல்வெட்டைப் படியெடுத்தனர். 1 மீட்டர் 50 செ.மீ. உயரமும், 50 செ.மீ. அகலமும் உடைய செவ்வக வடிவக் கல்தூணில் நான்கு பக்கங்களிலும் மங்கலச் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கீழ்ப்பகுதியில் பூரணகும்பமும், அதன் இருபுறமும் விளக்குகளும் காணப்படுகின்றன. அதற்கு மேலே கத்தியும், வில்லும், தர்மச்சக்கரமும் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும் உடுக்கை போன்ற பசும்பையும், கலப்பை (மேழி) வடிவமும் காணப்படுகிறது. அதற்கும் மேலே சாமரங்களும், நடுவே ஸ்ரீவத்சம் போன்ற குடை வடிவம் ஒன்றும் காணப்படுகின்றன. இம்மங்கலச் சின்னங்களுக்கு மேலே காணப்படும் கல்வெட்டில் "சுவஸ்திஸ்ரீ வீரதாவளத்தில் பௌத்தப் பள்ளிக்கு இந்த செந்தாமரைக் கண்ணநல்லூர் முதலடங்க இறையிலியான பள்ளிச் சந்தம்" என்று காணப்படுகிறது. புத்தர் அல்லது சமணக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலம் பள்ளிச் சந்தம் எனப்படும். செந்தாமரைக்கண்ணநல்லூர் என்ற இவ்வூர் முழுவதும் இறையிலியாக (வரியில்லாமல்) பௌத்தப் பள்ளிக்கு அளிக்கப்பட்டது. இக்கல்வெட்டு பொறிக்கப்பட்ட தூண் அருகே 11–12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்தர் சிற்பமும் காணப்படுகிறது. எனவே இங்கு புத்தர் கோயில் இருந்து காலப்போக்கில் அழிந்திருக்க வேண்டும் என கருதமுடிகிறது.

வீரத்தாவளம் என்பது வணிக வழியில் அமையும் தங்குமிடமாகும். வணிகர்கள் தங்களுக்கென்று பாதுகாப்புப் படைகளையும் கொண்டிருந்தனர். அவர்களது படையைக் குறிக்க வாள், வில் ஆகிய படைகலன்களும் காணப்படுகின்றன. அவ்வகையில் இக்கல்வெட்டுள்ள இடம் ஒரு வணிகர்களின் வீரத்தாவளமாக விளங்கியிருக்கிறது. இவ்வணிகர்கள் இங்கு அமைத்திருந்த பௌத்தக் கோயிலுக்கு ஒரு ஊரினை வரி நீக்கித் தந்துள்ளனர் என்பது தெளிவு. இடைக்கால வணிகம் மற்றும் பௌத்தம் பற்றிய வரலாற்றுக்குப் புதிய செய்தியை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.



வணிகக் குழுக்களில் கல்வெட்டுகளில் அவர் தம் வணிகப் பொருட்களான பொன் மற்றும் விளைபொருட்களைக் குறிக்க முறையே பசும்பை, கலப்பை ஆகியவற்றை கல்வெட்டுகளில் பொறிக்கும் வழக்கம் இருந்துள்ளதைத் தமிழகத்தின் பல்வேறு கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இங்குள்ள பகுதியில் விவசாயம் செய்யும்பொழுது சுடுமண் பொம்மைகள், காசுகள் போன்றவை கிடைப்பதாக ஊரார் தெரிவித்தனர். தொடர்ந்து இப்பகுதியில் தொல்லியல் துறையால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ★

# ஊரகப் பகுதிகளில் 5,003 வீடு கட்ட அரசு ரூ.5 கோடி ஒதுக்கீடு

கடன் மற்றும் மானிய உதவியுடன் ஊரகப் பகுதிகளில் வீடுகள் கட்டும் புதிய திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. 1999–2000ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்படும் இத்திட்டத்திற்கு விரிவான வழிகாட்டி நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது,

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழைக் குடும்பங்களுக்கு வீடு கட்டுவதற்குத் தேவைப்படும் நிதியை ஒரு பகுதி கடனாகவும், ஒரு பகுதி மானியமாகவும் அளிப்பதாகும். மேலும், ஒரு குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் அதாவது, இந்திரா குடியிருப்புத் திட்டம் போன்றவற்றின் கீழ் உதவி பெற இயலவில்லை என்று பொதுவாக நிலவும் குறையை இத்திட்டம் போக்கும். அரசிடமிருந்தே முழு உதவியையும் பெற வேண்டுமென்ற பயனாளிகளின் மனநிலையை மாற்றி, அரசு ஒரு உதவும் கருவியாக மட்டுமே இருக்குமென்பதும், பயனாளிகள் அவர்களுடைய நிதி பங்களிப்புடன் இத்திட்டத்தில் இணைய வேண்டும் என்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.


இத்திட்டத்தின்கீழ், ஊரகப் பகுதிகளில் வாழும் குடும்பங்களில் ஆண்டு வருமானம் ரூ.32,000 வரை பெறுபவர்கள் மட்டுமே பயனடைய முடியும். ஆனால், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்கும் சலுகை அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கு மானியமாக ஒதுக்கப்படும் நிதியில் குறைந்தது 60 சதவீதம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சார்ந்தவர் மற்றும் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்படும்.

இத்திட்டம் செயல்படுத்துவதற்கான இடத்தேர்வு குறித்து மாநில அரசே முடிவு செய்யும். ஆனால், இத்திட்டம் ஊரகப் பகுதிகளில் மட்டுமே செயற்படுத்தப்படும். நகரப் பகுதிகளாயின் நகரங்களிலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் உள்ள பகுதிகளிலும் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் இருந்து 5 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள பகுதிகளில் மட்டுமே செயற்படுத்தப்படும்.

இத்திட்டத்திற்கான நிதியை மத்திய மற்றும் மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும். இத்திட்டத்தின் கீழ், ஒரு வீடு கட்டுவதற்காக வழங்கப்படும் உச்சவரம்புக் கடன் ரூ.40,000 ஆகும். அதில், மானியமாக ஒரு வீட்டிற்கு ரூ.10,000 வழங்கப்படும்.

இந்திரா குடியிருப்புத் திட்டத்திற்காக வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள உலர் கழிப்பிடங்கள், மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்புகள், குறைந்த செலவிலான தொழில்நுட்பம் போன்றவை இத்திட்டத்திற்கு பொருந்தும்.

இத்திட்டத்தின் கீழ் 1999–2000ஆம் ஆண்டில் கட்டப்பட வேண்டிய வீடுகளின் இலக்கு 5,003 என்று மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. இதற்காக ஒதுக்கப்படும் நிதி ரூ.500.25 இலட்சமாகும். மத்திய அரசின் பங்கு ரூ.375.19 இலட்சமாகும் (75%). மாநில அரசின் பங்கு ரூ.125.06 இலட்சமாகும்.



இத்திட்டம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினால் (District Rural Development Agency) சென்னை நீங்கலாக மற்ற அனைத்து மாவட்டங்களிலும் செயற்படுத்தப்படும். கூட்டுறவுச் சங்கங்கள், வணிக வங்கிகள் போன்றவை இத்திட்டத்திற்கான கடனுதவி அளிக்கும்.

இத்திட்டத்திற்கான, தற்போது மத்திய அரசு விடுவித்துள்ள தொகையான ரூ.186.20 இலட்சத்திற்கு மாநில அரசின் பங்குத் தொகையான ரூ.62.07 இலட்சத்தினை சேர்த்து ரூ.248.27 இலட்சமாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

மாவட்டங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு கீழ்க்கண்டவாறு :

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | வீடுகளின் இலக்கு | மானியத் தொகை (ரூ. இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| | | | மத்திய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | மொத்தம் |
| 1. | காஞ்சிபுரம் | 243 | 18.223 | 6.074 | 24.298 |
| 2. | திருவள்ளூர் | 297 | 22.273 | 7.424 | 29.697 |
| 3. | கடலூர் | 577 | 43.271 | 14.423 | 57.694 |
| 4. | விழுப்புரம் | 426 | 31.947 | 10.649 | 42.596 |
| 5. | வேலூர் | 296 | 22.198 | 7.399 | 29.597 |
| 6. | திருவண்ணாமலை | 263 | 19.723 | 6.574 | 26.297 |
| 7. | சேலம் | 180 | 13.499 | 4.499 | 17.998 |
| 8. | நாமக்கல் | 138 | 10.349 | 3.450 | 13.799 |
| 9. | தருமபுரி | 201 | 15.074 | 5.024 | 20.098 |
| 10. | ஈரோடு | 154 | 11.549 | 3.850 | 15.398 |
| 11. | கோயம்புத்தூர் | 170 | 12.749 | 4.249 | 16.998 |
| 12. | நீலகிரி | 28 | 2.100 | 0.700 | 2.800 |
| 13. | தஞ்சாவூர் | 175 | 13.124 | 4.374 | 17.498 |
| 14. | நாகப்பட்டினம் | 211 | 15.824 | 5.274 | 21.098 |
| 15. | திருவாரூர் | 181 | 13.574 | 4.524 | 18.098 |
| 16. | திருச்சி | 150 | 11.249 | 3.750 | 14.999 |
| 17. | கரூர் | 77 | 5.774 | 1.925 | 7.699 |
| 18. | பெரம்பலூர் | 144 | 10.799 | 3.600 | 14.399 |
| 19. | புதுக்கோட்டை | 118 | 8.849 | 2.950 | 11.799 |
| 20. | மதுரை | 131 | 9.824 | 3.275 | 13.099 |
| 21. | தேனி | 63 | 4.725 | 1.575 | 6.299 |
| 22. | திண்டுக்கல் | 149 | 11.174 | 3.725 | 14.899 |
| 23. | இராமநாதபுரம் | 119 | 8.924 | 2.975 | 11.899 |
| 24. | விருதுநகர் | 132 | 9.899 | 3.300 | 13.199 |
| 25. | சிவகங்கை | 86 | 6.449 | 2.150 | 8.599 |
| 26. | திருநெல்வேலி | 162 | 12.149 | 4.050 | 16.198 |
| 27. | தூத்துக்குடி | 118 | 8.849 | 2.950 | 11.799 |
| 28. | கன்னியாகுமரி | 14 | 1.050 | 0.350 | 1.400 |
| | மொத்தம் | 5003 | 375.190 | 125.060 | 500.250 |

# நீர்வள ஆதாரங்கள் - நீரின் தன்மை


தண்ணீரின் அளவு மனித வாழ்க்கைக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் அறிவோம். நீர் ஆதாரங்களின் மற்றொரு முக்கிய அம்சமான நீரின் தன்மை அல்லது குணம் பற்றிய சில கருத்துக்களை இங்கு காண்போம்.

மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் போன்ற ஆதாரங்களிலிருந்து மனித உபயோகத்திற்காக, எடுக்கப்படும் நீர், மக்களின் அடிப்படை வீட்டு உபயோகம், கால்நடை பயன்பாடு, தொழிற்சாலை உபயோகம், பாசன பயன்பாடு போன்ற தேவைகளை நிறைவு செய்கிறது. மனிதனின் பல்வேறு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் நீரில் உயிரியல் கூறுகள் பயன்படுத்தியது போக, பெரும்பகுதி கழிவுநீராக மறுபடியும் சுற்றுப்புறத்தில் வெளிப்படுகிறது. உதாரணமாக, வீட்டின் குளியலறை, சமையலறை, கழிவறை போன்ற இடங்களிலிருந்து தண்ணீர் பலவிதப்பட்ட அசுத்தங்களை சுமந்து கொண்டு கழிவுநீர் தடங்கள் மூலம் மறுபடியும் ஆறு, குளம், ஏரி போன்ற ஏதாவது ஒரு நீர் ஆதாரத்தையோ, நிலப்பரப்பையோ சென்றடைகிறது. மனிதனின் அடிப்படை பயன்பாட்டின்போது இவ்வாறு வெளிப்படும் கழிவுநீரின் அளவு சராசரியாக 70 விழுக்காடு இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதே போன்று, தொழிற்சாலைகளில் நீர் வெவ்வேறு உற்பத்தி நிலைகளில் உபயோகப்படுத்தப்பட்டு அதன் பெரும் பகுதி தொழிலகக் கழிவுகளை ஈர்த்துக் கொண்டு தொழிற்சாலை திரவக் கழிவாக மாறுகிறது. நிலப்பரப்பில் பெறப்படும் மழையானது, அதன் அளவு, வேகம், மழை பொழியும் நேரம் மற்றும் மழை விழும் பரப்பின் சுற்றுச் சூழல் நிலையைப் பொறுத்து அது வடிந்தோடும் போது நிலப்பரப்பின் மேல் மண்ணை அடித்துச் செல்வதோடு வேளாண் நிலங்களிலிருந்து உரம், பூச்சி கொல்லி போன்ற வேதியல் பொருட்களின் மிச்சத்தையும் எடுத்துச் சென்று நீராதாரத்தில் சேர்த்துவிடுகிறது. மேற்சொன்ன உதாரணங்களிலிருந்து, சூழலியல் மண்டலங்களுக் கிடையே நிகழும் நீர் சுழற்சியின்போது அதன் குணத்தில் பல விரும்பத்தகாத பௌதிக, வேதியல் மற்றும் உயிரியல் மாற்றங்கள் உண்டாகின்றன என்பதை பார்க்கிறோம். இவ்வாறு நீர் மாசுபடுவது மனிதனின் பல நடவடிக்கைகளால் இணைக்கப்பட்ட சங்கிலித் தொடர் போன்று அமைந்துள்ளது.

இந்தியாவில் நீர் மாசு ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக இருப்பவை நகராட்சி மற்றும் தொழிற்சாலை கழிவுகள்தாம். நமது நாட்டில் உருவான மொத்த நகர்புற கழிவுநீர் 1997ல் நாளொன்றுக்கு 30,000 மில்லியன் லிட்டர் ஆக இருந்தது. இக்கழிவுநீரில் வெறும் 10 விழுக்காடு மட்டுமே சுத்திகரிப்பு செய்வதற்கான வசதிகள் நகரங்களில் அமைந்துள்ளது. அதேபோன்று, நீரை அதிகம் பயன்படுத்தும் வேளாண் பொருள்களை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகள், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், உரம், பெட்ரோ பொருட்கள், வேதியல் பொருட்கள் உற்பத்தி தொழிற்சாலைகள் மற்றும் சிறுதொழிற்சாலைகள் நாளும் அதிகரித்து வருவதையும் பார்க்கிறோம். கடந்த ஐம்பது ஆண்டுகளில் (1947–1997) இத்தகைய தொழிற்சாலைகள் வெளிப்படுத்தும் கழிவுநீரின் அளவு 43 மடங்கு அதிகரித்துள்ளது என கணிக்கப் பட்டுள்ளது

இந்தியாவில் ஆற்று நீரின் தன்மை நகராட்சி மற்றும் தொழிற்சாலைக் கழிவுகளால் பெரிதும் மாசுபட்டுள்ளதை நீர் ஆய்வுகள் தெளிவு படுத்தியுள்ளன. இந்திய தேசிய நீராதாரங்களின் கூர்ந்தாய்வு (MINARS), உலக சுற்றுப்புற கூர்ந்தாய்வு அமைப்பு (GEMS) மற்றும் கங்கை செயல் திட்டம் (GAP) ஆகியவற்றின் மூலம் நாட்டின் 14 முக்கிய நதிகள் உட்பட 113 ஆற்றுப்படுகைகளில் மொத்தம் 480 ஆய்வு நிலையங்களில் நீர் மாதிரிகள் எடுத்து, பயோகெமிகல் ஆக்ஸிஜன் டிமாண்டு (BOD), டிஸ்ஸால்வ்டு ஆக்ஸிஜன் (DO) மற்றும் மொத்த கோலிபார்ம் எண்ணிக்கை (TC) உட்பட்ட பல குணாதிசயங்கள் ஆய்வு செய்து வரப்படுகிறது. அத்தகைய ஆய்வின் அடிப்படையில் நீரின் தன்மையை அதன் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு அ முதல் உ வரை ஐந்து வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை :

பிரிவு அ : வழக்கமான சுத்திகரிப்பு இல்லாமல், நோய்கிருமிகள் நீக்கத்திற்கு பின் குடிப்பதற்கு தகுதியான நீர்




பிரிவு ஆ : குளிக்க, நீந்த மற்றும் உல்லாசத்திற்கு தகுதியான நீர்

பிரிவு இ : வழக்கமான சுத்திகரிப்பிற்கு பின் குடிப்பதற்கு தகுதியான நீர்

பிரிவு ஈ : வன உயிரின, மீன்வளப் பெருக்கத்திற்கு தகுதியான நீர்

பிரிவு உ : பாசனத்திற்கு, தொழிற்சாலை குளிர்விப்பு பணிகள் மற்றும் கட்டுப்பாட்டுடன் கூடிய கழிவு வெளியேற்றத்திற்கு மட்டும் தகுதியான நீர்

தற்போதைய நீர் ஆய்வின் முடிவுகள் நாட்டின் பெருநதிகளின் பெரும்பாலான பகுதிகள் "இ" பிரிவில் அமைந்திருப்பதாகவும் சில இடங்களில் "ஈ" பிரிவில் இருப்பதாகவும் தெளிவுபடுத்துகின்றன.

நீர் மாசினால் மனித சுகாதாரத்திற்கு உண்டாகும் விளைவுகள் குறித்து 1990ம் ஆண்டில் நிகழ்த்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பில் இந்தியாவில் நிகழும் இறப்புகளில் சுமார் 9 விழுக்காடு தரம் குறைந்த நீர் வழங்கபபடுவதாலும், பற்றாககுறை பொது சுகாதாரம் மற்றும் தனிமனித சுகாதார பழக்கவழக்கங்களாலும் ஏற்படடுள்ளது என்று தெரிய வந்தது. இந்த சுகாதாரக் கேடுகளால் நாட்டிறகு ஏற்படும் இழப்பு பொருளாதார மதிப்பீட்டில் ரூ.10,700 முதல் ரூ.29,000 கோடி வரை ஆகும் என உலக வங்கி நிறுவனம் கணககிட்டுள்ளது. எனவே, நமது நீர் ஆதாரங்களை மாசடையாமல் காபபது அவசியமாகிறது. நீர் மாசு அடைவதை முற்றிலும் நீக்குவது என்பது இன்றைய சமூக பொருளாதார நிலையில் சாத்தியமில்லாத ஒன்று என்றாலும், நீர் மாசினை வெகுவாகக் கட்டுப்படுத்துவதற்கு உரிய மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப உத்திகளை மைய, மாநில அரசுகள் திட்டமிட்டு செயல்படுத்தி வருகின்றன. பொதுவாக, மாசு கட்டுப்பாடு பணிகள் அ) நீரின் சுயசுத்திகரிப்பு திறனை (Self purification potential) பயன்படுத்துவது. ஆ) சட்டம் சார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்வது மற்றும் இ) மாசு தடுப்புத் திட்டங்களை வகுத்து செயல்படுத்துவது ஆகிய மூன்று வகைகளில் செயல்வடிவம் பெறுகிறது. இவற்றுள் நீரின் மாசு காப்பு திறன், கழிவுநீர் வெளியேறும் நீர் ஆதாரத்தில் உள்ள நீரோட்ட அளவு, தூரம், காலம் ஆகியவற்றால் நிர்ணயிக்கப்படுகிறது. சட்டம் சார்ந்த நடவடிக்கைகள் அந்தந்த மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மைய மாசு கட்டுப்பாடு வாரியம் மூலமாக செயலாக்கப்படுகிறது. நீர் மாசு தடுப்பு திட்டங்கள் வகையில் 1985 முதல் கங்கை நதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கங்கை நதி செயல் திட்டம், 1995 முதல் தொடங்கப்பட்டுள்ள தேசிய நதி பாதுகாப்புத் திட்டம், தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள பொது/தனி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவை அடங்கும். தேசிய நதி பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் காவிரி நதிநீர் மாசுபட்டுள்ள இடங்களைத் தேர்வு செய்து மாசு தடுப்புப் பணிகள் சுற்றுச்சூழல் துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

*நன்றி :*
*சுற்றுச்சூழல் செய்தி மடல்.*

# கலைஞர் ஆட்சியில் மகளிர் திட்டம்



நாட்டு விடுதலைக்காகப் போராடிய அண்ணல் காந்தியடிகள், சுதந்திர தாகத்தை நம் பாரத மக்களிடையே உருவாக்க முனைந்த அதே கால கட்டத்திலேயே பெண்ணுரிமை பேணப்பட வேண்டுமென்பதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். "பொறுமையின் சிகரமான நம் பெண்கள், வம்சாவழியாக, பல நூற்றாண்டுகளாக, உரிமையற்றவராக – அவர்களது சக்தியின் ஆற்றலை உணராதவர்களாக, வெறும் இயந்திரங்களாகச் சுழன்று வருகிறார்களே" என்று பல்வேறு கட்டங்களில் அவர் தன்னுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அண்ணல் காந்தியடிகளினால் குறிப்பிடப்பட்டுள்ள இத்தகு அவலநிலையை மாற்றிப் பெண்களை, அதிலும் குறிப்பாக கிராமப்புற ஏழைப்பெண்களை சமூகப் பொருளாதார ரீதியில் நிலை உயர்த்திட வேண்டுமென்ற அடிப்படையில், கலைஞர் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அதில், மிகவும் குறிப்பிடத்தக்க திட்டமாக மகளிர் திட்டம் விளங்குகிறது.

கிராமப்புறங்களிலுள்ள ஏழை, எளிய மகளிரைக் கண்டறிந்து, அவர்களை ஒருங்கிணைத்து, ஒரு குழு அமைப்பிற்குள் கொண்டு வந்து, அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளையளித்து, சுயதொழில் தொடங்கிட மானியத்துடன் கூடிய கடனுதவிகளும் அளிக்கப்படுகின்றன.

ஏழ்மையில் வாடும் குடும்பங்களின் பொருளாதாரச் சுமையைப் பெண்களும், ஆண்களும் பகிர்ந்து கொள்ளும் அந்தச் சமநிலை உருவாகிடும் பொழுது, ஆணுக்குப் பெண் தாழ்ந்தவளல்ல; இருவரும் இணையே என்ற இனிய நிலை, இத்திட்டத்தின் வாயிலாக எய்தப்படும் என்பது உறுதியே!



ஒரே கிராமத்தை சேர்ந்த ஆர்வமிக்க
ஏழை பெண்களை ஒன்று சேர்த்து
12 முதல் 20 உறுப்பினர்கள் கொண்ட
சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கம்.

கிராமப்புறங்களில் வாழும் மிகவும் ஏழ்மை
நிலையில் உள்ள ஆதரவற்ற பெண்களின்
சமூக – பொருளாதார
முன்னேற்றத்திற்கான
சுயஉதவிக் குழுக்கள் அமைப்பு.




60,000 சுயஉதவிக் குழுக்கள் மூலம்
பத்து இலட்சம் மகளிரின்
சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டை
உறுதிசெய்து பெண்களைச்
சுயசார்பு பெற்றவர்களாக
ஆக்கிட இலக்கு.




தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
நிறுவனத்தால் அங்கீகாரம் பெற்றத்
தொண்டு நிறுவனங்கள்
கிராமங்களுக்குச் சென்று,
புள்ளி விவரங்கள் சேகரித்து,
வறுமைக்கோட்டின் கீழ்
வாழும் பெண்களைக் கண்டறிந்து,
அவர்களை குழுவாக ஒருங்கிணைத்து,
மேலும் அவர்கள் மேற்பார்வையில்
தகுதியான பயிற்சிகள் அளிப்பு.

தகுதியுள்ள பெண்களை
ஊக்குநராகவும், பிரதிநிதிகளாகவும்
தேர்ந்தெடுப்பதோடு, குழுக்களை
ஜனநாயக முறையில் அமைத்து,
அனைவரும் கலந்துபேசி கூட்டு
தீர்மானங்கள் நிறைவேற்றம்.




சேமிப்பு, அதன் அளவு,
சந்தாத் தொகை,
குழுக் கூட்டத்தில் முடிவு;
குழுப் பெயரில்
அருகாமையிலுள்ள வங்கியில்
சேமிப்பு கணக்குத்
தொடக்கம்.




சங்கத்தின் வளர்ச்சிக்கேற்ப
சங்கக் கடன் அளவு, வட்டி,
திருப்பிச்செலுத்தும்
தவணைமுறை ஆகியவற்றை
குழுவே நிர்ணயித்து,
அவசர தேவைகளுக்கு
முன்னுரிமை அளித்து,
கடன் தேவைப்படும்
உறுப்பினருக்குத் தீர்மானம்
நிறைவேற்றி
கடன் வழங்கல்.





கந்து வட்டிக்காரனிடம் பொருட்களை அடமானம் வைத்து, அதிக வட்டியில் கடன் பெற்று, கடனை அடைக்க முடியாமல் அல்லல்பட்டுவந்த நிலைமாறி, சுழற்சி முறையில் குழு சேமிப்பிலிருந்து கடன் பெற்றுத் தொழில் தொடங்க வாய்ப்பு.

குறைந்தபட்சம் ஒரு வருடமாவது நன்றாக செயலாற்றிய பின், வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்கள் மூலம் கடனுதவிபெற, குழுக்கள் தகுதி பெறுகின்றன.




மாதாமாதம் வட்டார அளவிலான ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அனுபவ பகிர்வு.

சிறப்பாகச் செயல்படும் குழுக்கள் அரசின் திட்டங்கள், ஸ்வர்ண ஜயந்தி கிராம ஸ்வரோஜ்கார் யோஜனா, தாட்கோ போன்ற திட்டங்கள் மூலம் பயனடைய உதவி செய்யப்படுகிறது.




மாடு வளர்த்தல், கோழி வளர்த்தல்,
ஆடு வளர்த்தல்,
கூடை பின்னுதல்,
பூந்தோட்டம் அமைத்தல்
போன்ற பல தொழில் செய்ய
முனைவோர்க்கு அதற்கான
பயிற்சியும் முறையே அளிக்கப்படுகிறது.

8 மாவட்டங்களில் மட்டுமே
செயல்பட்டுவந்த ஐஃபாட் (IFAD),
திட்டத்தின் சீர்மிகு செயல்பாடுகளைக்
கருத்தில் கொண்டு
1996–97ஆம் ஆண்டு தமிழக அரசால்
'மகளிர் திட்டம்' என்ற திட்டம்
மாநிலம் முழுவதும் செயல்படுத்த முடிவு.
இத்திட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்டோர்,
கைம்பெண்கள், கணவனால்
கைவிடப்பட்டோர், ஊனமுற்றோர்
போன்றவர்களுக்கு முன்னுரிமை.




குடிநீர் வசதி, மின் வசதி,
சாலை வசதி, தெரு விளக்கு,
வடிகால் வசதி,
போக்குவரத்து வசதிகளையும்
ஏற்படுத்தவும்
பராமரிக்கவும்
உதவுகின்றன.




குழந்தைகளைத் தவறாமல்
பள்ளிக்கு அனுப்புதல்;

சாதி–மத வேறுபாடுகளைக் களைந்து
ஒற்றுமையாகச் செயல்படுதல்;

சுற்றுப்புறங்களைத்
தூய்மையாக பேணுதல்.






குடிப்பழக்கத்திற்கு
எதிராக
போராடுதல்.

இளம் வயது
திருமணத்தைத்
தவிர்த்தல்.



சிசுவதை தடுப்பு,
வரதட்சிணை எதிர்ப்பு,
கூட்டத்தில் உறுதிமொழி
எடுத்தல்.




கிராம சபைக் கூட்டங்களில்
தவறாது கலந்துகொண்டு,
கிராம வளர்ச்சிக்கு
ஒத்துழைப்பு கொடுத்தல்.

அக்டோபர்
2ஆம் தேதி அன்று நடந்த
கிராமசபைக் கூட்டங்களில்
பல பெண்கள் பங்கேற்று,
கிராம நலப்பணிகளில்
உதவ முன்வந்துள்ளனர்.

மாவட்ட ஆட்சியர் தலைமையில்
மாவட்ட திட்ட ஒருங்கிணைப்புக் குழு
இருமாதங்களுக்கு ஒருமுறை கூடி,
சுயஉதவிக் குழுக்களின் வளர்ச்சிக்காக
புதிய திட்டங்கள் மற்றும் வழிமுறைகளை
விவாதித்து செயல்பாடுகளை ஆராய்ந்து
ஊக்குவிக்கிறது.

இதுதவிர ஒவ்வொரு மாவட்டத்திலும்
மகளிர் திட்டத்தில் பங்கேற்கும் தொண்டு
நிறுவனங்களின் மாத ஆய்வுக்கூட்டம்
நடத்தப்பட்டு குழுக்களின் வளர்ச்சிக்கான
அறிவுரை வழங்கப்படுகிறது.





சுயஉதவிக் குழுக்கள் சாதனைகள்,
பல்வேறு நடவடிக்கைகள், மேலும்
பெண்களுக்கான அரசு திட்டங்கள்,
உடல்நலம் மற்றும் சுகாதாரம், சுற்றுப்புறம்
பேணுதல் போன்ற அனுபவப்
பகிர்வுகளுக்காக 'தமிழ்நாடு மகளிர்
மேம்பாட்டு முற்றம்' என்ற பத்திரிகை
மாதாமாதம் வெளியிடப்படுகிறது.
இலவசமாக குழுக்களுக்கு
வழங்கப்படுகிறது. குழு உறுப்பினர்கள்
தங்கள் அனுபவங்கள், குறிப்புகள் மற்றும்
சிறு கவிதைகளை முற்றத்திற்கு அனுப்பி
தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி
அனுபவப்பகிர்வு பெற்று மேம்பாடு
அடைந்து வருகின்றனர்.

மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும்
மகளிர்நல மேம்பாட்டு நிறுவனத்தின்
திட்ட செயலாக்க அலுவலகம்,
ஒரு திட்ட அலுவலர் தலைமையில்
செயல்பட்டு வருகிறது.




இத்திட்டத்திற்காக,
கலைஞர் ஆணையில்
கடந்த ஆண்டு
ரூ.8 கோடி ஒதுக்கீடு
செய்யப்பட்டது.
இந்த ஆண்டில்
ரூ.32.82 கோடி ஒப்பளிப்பு
செய்யப்பட்டுள்ளது.





மகளிர் திட்டத்தின் முன்னோடியான
ஐஃபாட் திட்டத்தின் மூலம்
5,207 சுயஉதவிக் குழுக்கள்
31-12-1998 வரை அமைக்கப்பட்டன.
இதன்மூலம் 1,20,960 ஏழைப்பெண்கள்
குழுக்களில் சேர்ந்து பயனடைந்து
வருகின்றனர். அதில் 90,470 பெண்கள்
வங்கி மூலம் ரூ.53.83 கோடி கடன் உதவி
பெற்றுள்ளனர். ரூ.30.44 கோடி
மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
மொத்தமாக ரூ.84.27 கோடிக்கு நிதியுதவி
அளிக்கப்பட்டுள்ளது.



இந்த திட்டத்தின்
சீர்மிகு செயல்பாடுகளைக் கருத்தில்
கொண்டு ஐஃபாட் திட்டம் மகளிர்
திட்டத்துடன் இணைக்கப்பட்டு,
28 மாவட்டங்களில்
நடைமுறைப்படுத்தப்படுகிறது.



31-10-1999 வரை
19,485 சுயஉதவிக் குழுக்கள்
செயல்பட்டு வருகின்றன.
இத்திட்டத்தில்
3,71,216 பெண்கள்
சேர்ந்து பயனடைந்து
வருகிறார்கள். இவர்கள்
மகளிர் மற்றும்
கிராம முன்னேற்றத்திற்காக
பாடுபட்டு வருகின்றனர்.

# 11ஆவது மத்திய நிதிக்குழுக் கூட்டம்

**சென்னையில் 1.11.99 அன்று நடைபெற்ற 11-வது மத்திய நிதிக்குழுக்கூட்டத்தில் முதல்வர் கலைஞர் அவர்களின் உரை**

தமிழக அமைச்சர்கள், அரசு அதிகாரிகள் தமிழக மக்கள் ஆகியோரின் சார்பில் உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன். சென்னையில் தங்கியிருப்பது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் என்றும், இங்கு நடைபெறும் விவாதங்கள் மகிழ்ச்சியாகவும் பயனுள்ள முறையிலும் அமையும் என்றும் நான் நம்புகிறேன்.

பல ஆண்டுகளாக நமது நாட்டின் கூட்டமைப்பில் இருந்துவரும் ஏற்றத்தாழ்வு களையும், நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் சரிசெய்யக்கூடிய சிக்கலான பணியினை நிறைவேற்றுவதற்கு, பல்வேறு பதவிகளை வகித்து நிறைந்த அனுபவம் பெற்றுள்ள கல்வியாளரும், பொருளாதார நிபுணருமாகிய பேராசிரியர் குஸ்ரோ அவர்கள் மிகவும் பொருத்தமானவர். இந்த நிதிக்குழு பல்வேறு துறைகளையும் சார்ந்த நிபுணர்களை கொண்டுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாகும். உங்கள் அனைவருடைய பல்வேறுபட்ட அனுபவங்களும் மத்திய-மாநில அரசுகளின் நிதி உறவுகள் குறித்து தகுந்த பரிந்துரைகளை இந்நிதிக்குழு வழங்குவதற்கு மிகவும் பயன்படும் என்று உறுதியாக நம்புகிறேன்.

நிதி நிர்வாகத்தில் கூட்டமைப்புக் கொள்கையை (Fiscal Federalism) மேம்படுத்துவதில் இந்த 11வது நிதிக்குழு முக்கிய பங்கினை வகிக்கிறது. இந்த நிதிக்குழுவின் அதிகார வரம்புகள் முந்தைய நிதிக்குழுக்களைவிட மிகவும் விரிவானதாகும். மத்திய மாநில அரசுகளின் நிதி நிலைமையை விரிவாக ஆய்வு செய்யுமாறும், உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியுதவி செய்வதற்கேற்ப மாநிலங்களின் தொகுப்பு நிதியை பெருக்குவதற்கு உரிய வழிவகைகளை பரிந்துரை செய்யுமாறும், நிதிக்குழு முதன் முறையாக கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. முந்தைய நிதிக்குழுக்கள் திட்டம்சாரா வருவாய் இனத்தின் வருவாய் குறித்தும் மதிப்பீடு செய்யும். மேலும், எதிர்காலத்தில் தேவைப்படும் மூலதனச் செலவுகளையும் ஆராயும். எங்களுடைய கருத்துகளை விரிவான அறிக்கையின் மூலம் நிதிக் குழுவிற்கு தெரிவித்துள்ளோம். இந்த அறிக் கையில் இடம் பெற்றுள்ள எங்களுடைய கோரிக்கைகள் குறித்த சுருக்கக் குறிப்புகள் விரைவான பரிசீலனைக்காக அனைவருக்கும் வழங்கப் பட்டுள்ளது. எனது உரை, அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ள முக்கிய அம்சங்களைச் சார்ந்து அமைந்துள்ளது.

இந்திய அரசியலமைப்பின் முதல் பிரிவு இந்தியாவை "மாநிலங்களின் ஒருங்கிணைப்பு" (Union of States) என்கிறது.. அரசிலமைப்பின்படி நிர்ணயிக்கப்பட்ட பொறுப்புகளையும், கடமை களையும் மத்திய – மாநில அரசுகள் சுதந்திரமாக நிறைவேற்றும் வகையில் நிதி பங்கீடுகள் அமைந்திருக்க வேண்டும். நிதிக்குழு பரிந்துரையின் அடிப்படையில் மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதி, மத்திய அரசின் நிதித்தொகுப்பிலிருந்து மாநிலங் களுக்குச் செய்யப்படும் "மாறுதல்" (Transfer) எனக் கொள்ளக்கூடாது; உண்மையான மாநிலங்களின் கூட்டமைப்பில் நாட்டின் ஒட்டுமொத்த வருவாய் வளங்களை பெருகிவரும் தேவைகளுக்கேற்ப செய்யப்படும் "மறு ஒதுக்கீடு" (Re-distribution) என்றே கொள்ள வேண்டும். மேலும், போதுமான வளைந்து கொடுக்கக்கூடிய, உறுதியான வழிகாட்டு விதிமுறைகளைத் துணையாகக் கொண்டு நாட்டின் வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படும் என்பது எங்களுடைய திடமான நம்பிக்கையாகும்.

தமிழகத்தைப் பற்றிய விவரங்களை சுருக்கமாக ஒரு சில நிமிடங்களில் கூறிட விரும்புகிறேன். தமிழகம் மக்கள் தொகை மிகுந்துள்ள மாநிலங்களில் ஒன்றாகும். நாட்டின் மொத்த நிலப்பரப்பில் நான்கு சதவீத அளவே கொண்டுள்ள தமிழகம், இந்தியாவின் மக்கள் தொகையில் ஏறத்தாழ 7 சதவீத அளவை கொண்டுள்ளது. இந்திய அளவில் சராசரியாக ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 267 பேர் மட்டுமே வாழ்கின்றனர். ஆனால் தமிழகத்திலோ ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 430 பேர் வாழ்கின்றனர். நகர்ப்புறப் பகுதிகளில் வாழும் மக்கள் தொகையும் தமிழகத்தில் அதிகமாகும். தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் 35 விழுக்காட்டினர் நகர்ப்புறங்களில் வாழுகின்றனர். நகர்ப்புற மக்கள் தொகை படிப்படியாக தொடர்ந்து வளர்ந்து வருகிறது. நகர்மயமாகி வரும் தன்மையினால் குடிநீர், சுகாதாரம்,

மருத்துவம், சாலைப் போக்குவரத்து போன்ற பிற முக்கியமான, நகர்புறங்களுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை போதுமான அளவில் உருவாக்கித் தரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இம்மாநிலம், மிகவும் குறைந்த அளவிலான கனிம வளங்களை கொண்டுள்ளது. காடுகள் போன்ற இயற்கைச் செல்வங்களும் குறைவாகவே உள்ளன. தண்ணீர் பற்றாக்குறையும் உள்ளது. இங்குள்ள நீர் வளங்கள் ஏற்கெனவே விவசாயத்திற்கும், மின் உற்பத்திக்கும் முழுமையாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. நிலத்தடி நீர் வளமும் முழுமையாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் அதிக அளவில் நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது தடுக்கப்பட வேண்டிய அளவில் உள்ளது. இத்தகைய பற்றாக்குறைகளும், மாற்று வழியின்மையும் உள்ள சூழ்நிலையிலும் தமிழகம் தனது அரசியல் உறுதித் தன்மை காரணமாக, மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக சமூக பாதுகாப்பு முறைகளை மேம்படுத்த வேண்டிய தேவைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளித்து வருகிறது. இந்த வகையில் சமூக முன்னேற்றத்தின் முக்கிய காரணிகளாகிய மக்கள் தொகை, சுகாதாரம், கல்வி ஆகியவற்றிலும், தற்போது அதிக அளவில் தொழில்நுட்ப ஆற்றல் வாய்ந்த மனித வளத்தைப் பெருக்கியுள்ளதிலும், தமிழகம் மிகச் சிறந்த முறையில் முன்னேற்றம் அடைந்துள்ளது. இந்த முயற்சிகளை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு அரசு வரி விதிப்பு, கடன் திரட்டுதல் ஆகியவற்றின் மூலம் வளங்களை பெருக்குவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இவற்றை நிலைநிறுத்துவதற்காக மத்திய அரசிலிருந்து தேவையான நிதியுதவிகளை அளிப்பது மிகவும் முக்கியமானதாகவும், தேவையாகவும் அமைந்துள்ளது. இந்த அடிப்படையில் 11வது நிதிக்குழு தமிழக அரசுக்கு ஆதரவு அளிப்பது தேவையாய் உள்ளது.

இந்த நிதிக்குழுவின் ஆய்வு வரம்புகளை விவாதிக்கும்முன், இதற்குமுன் அமைக்கப்பட்ட நிதிக்குழுக்கள் இம்மாநிலத்திற்கு என்ன வழங்கியுள்ளன என்பதைப் பற்றி விவாதிப்பது பயனுள்ளதாக இருக்கும். தமிழ்நாட்டின் சாதுர்யமான நிதிநிர்வாகத்தைப் பாராட்டுவதற்குப் பதிலாக முந்தைய நிதிக்குழுக்கள் இம்மாநிலத்தை தண்டித்துள்ளன என்று சொல்வது கசப்பான உண்மையாகும். சிறப்பான நிதிநிர்வாகத்திலும், வரிவிதிப்பு முறைகளிலும் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலையிலுள்ளது. நிகர உற்பத்தி மதிப்பின் வரி விகிதம் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் அதிகமாகவே உள்ளது. இப்படியெல்லாம் இருந்தும்கூட, வருமானவரியில் தமிழகத்தின் பங்கு விகிதம் 8.4 விழுக்காட்டிலிருந்து 6.637 விழுக்காடாகக் குறைந்துள்ளது; மத்திய ஆயத்தீர்வையில் மாநிலத்தின் பங்கு 7.56 விழுக்காட்டிலிருந்து 6.637 விழுக்காடாகக் குறைந்துள்ளது. நிதிப்பற்றாக்குறை மாநிலங்களே வருமானவரி விகிதங்களால் பெருமளவில் பயனடைகின்றன. மேலும், அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 275–ன் கீழ், நிதிப்பற்றாக்குறை மாநிலங்களுக்கு பெருமளவில் மானிய உதவிகள் வழங்கப்படுவதில் சலுகைகள் காட்டப்பட்டு வருகின்றன. வரிவருவாய்த் தொகுப்பைப் பங்களித்துப் பிறகு பற்றாக்குறை எய்திய மாநிலங்களில் தமிழ்நாட்டிற்கு எவ்வித மானியங்களும் அளிக்கப்படுவதில்லை. உண்மைக்கு மாறாக, நிதிக்குழு வருவாய்த் தொகுப்பைப் பங்களித்துப் பிறகு உள்ள நிலையையே கவனிக்கிறது. நிதிப் பற்றாக்குறையை மதிப்பீடு செய்வதில் அதன் உண்மை நிலையை வெளிப்படுத்துவதில் தொடர்ந்து வரும் நிதிக்குழுக்கள் தங்களது அடிப்படை வழிமுறைகளைப் பின்பற்றவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. நிதிப்பற்றாக்குறைகளை மதிப்பீடு செய்வதில் இதுவரையில் பின்பற்றப்பட்டுவந்த நடைமுறைகளைத் தவிர்த்து, உண்மை நிலையை உணர்ந்து அதற்கேற்றவாறு செயல்படவேண்டுமென்று 11வது நிதிக்குழுவை இத்தருணத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். நிதி நிர்வாகத்தில் திறமையையும், சாதுர்யத்தையும் தகுந்த சன்மானத்தின் மூலம் ஊக்கப்படுத்தப்பட வேண்டுமே தவிர, இதுகாறும் செய்து வந்ததைப்போல, தண்டிப்பதன்மூலம் எக்காரியத்தையும் செய்ய இயலாது. ஆகவே, திறமையான நிதி நிர்வாகத்திற்கும், வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கும் போதிய முக்கியத்துவத்தை அளிக்க வேண்டுமென்று 11வது நிதிக்குழுவை நான் கேட்டுக்கொள்கிறேன்.

நிதிகளைப் பங்கீடு செய்வதில் மாற்று செயல் திட்டத்தை 10வது நிதிக்குழு பரிந்துரைத்துள்ளது. மத்திய வருவாய்த் தொகுப்பின் 29 விழுக்காட்டினை மாநிலங்களுக்குப் பங்கீடு செய்ய வேண்டுமென்ற திட்டம் அனைத்து மாநிலங்களாலும் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மத்திய வருவாய்த் தொகுப்பில் ஏற்படும் அதிக வருவாயில் சராசரியாக மாநிலங்களுக்கிடையே பங்கீடு செய்து கொள்ள முடிகிறது என்பதே இத்திட்டத்தின் போற்றத்தக்க நற்பலனாகும். ஆயினும் இத்திட்டம் இக்குழுவின் இறுதி கட்டத்தில்கூட நிறைவேற்றப் படவில்லை என்பதை நாம் காணமுடிகிறது. இத்திட்டத்தை 1.4.1996 முதல் நடைமுறைபடுத்தி, 1.4.98 முதல் நிதிப் பங்கீட்டை 33.33 விழுக்காடாக உயர்த்திக்கொள்வதோடு, இதனை வரும் 2000–2001ஆம் ஆண்டில் 40 விழுக்காடாகவும் உயர்த்தி அளிக்க 11வது நிதிக்குழு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும் என்பதே எங்களது கோரிக்கை யாகும்.

எக்காரணம் பற்றியேனும் இதைச்செய்வது தாமதப்படுத்தப்பட்டால், இப்போதையே ஏற்பாடே

தொடரும் நிலை இருக்குமானால், அப்போது பின் வருவனவற்றைப் பரிசீலிக்க வேண்டுமென்று 11ஆம் நிதிக்குழுவை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

கூட்டு நிறுவனவரி (Corporation Tax) தொடர்ந்து பகிர்ந்தளிக்கத்தக்க வரித்தொகுப்புக்கு வெளியே இருக்கிறது. கூட்டுநிறுவனவரியின் நிகர வருவாய் மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளத்தக்கதாகச் செய்யப்படவேண்டும் என்று சர்க்காரியா கமிஷன் பரிந்துரைத்துள்ளது. 1979ஆம் ஆண்டிலேயே தமிழக அரசு அமைத்த ராஜமன்னார் குழு மைய—மாநில உறவுகள் குறித்து விரிவாகப் பரிசீலனை செய்து, வருமானவரியிலிருந்து கிடைக்கின்ற வருவாயைவிட கூட்டுநிறுவன வரிவருவாய் விஞ்சியுள்ளது என்று குறிப்பிட்டிருந்தது. கூட்டுநிறுவன வரியைப் பகிர்ந்தளிக்கத்தக்க தொகுப்பில் கொண்டுவருமாறு பரிந்துரை செய்யவேண்டுமென்று நான் 11ஆம் நிதிக்குழுவை வற்புறுத்த விழைகிறேன். மேலும், வருமான வரி வருவாயின் பகிர்ந்து கொள்ளத்தக்க சதவீத அளவு முன்பிருந்ததுபோல 85 சதவீதம் ஆக்கப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்காரியா குழு விளம்பரங்களின் மீது வரிவிதிக்க வேண்டுமென்றும் பரிந்துரைத்திருந்தது. மாநிலங் களிடை மன்றம் (Inter-State Council) இப்பொருளை 11ஆவது நிதிக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும் என்று தெரிவித்திருந்தது. எனவே, இப்போது விளம்பரவரி (Tax on advertisements) மற்றும் சரக்கு ஒப்படைவரி (Consignment Tax) விதிப்பதற்குக் குழு பரிந்துரைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நிதித்துறையில் சிக்கனத்தைக் கடைப்பிடித்த தமிழ்நாட்டைப் போன்ற மாநிலங்களிடம் 10ஆம் நிதிக்குழு கடுமையாக நடந்துகொண்டு நியாயம் வழங்கத் தவறியது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். 10ஆம் நிதிக்குழு பகிர்ந்தளிக்கத்தக்க வரி வருவாய் தொகுப்பில் பகிர்ந்தளிக்கும் சதவிகிதத்தை 85 சதவீதம் என்பதிலிருந்து 77.5 சதவீதமாக குறைத்தது. மேலும், ஆயத்தீர்வைகளில் அளிக்கும் பங்கை உயர்த்துவதாகவும் வாக்களித்தது. ஆயத்தீர்வைகளின் பங்கை 10ஆம் நிதிக்குழு 45 சதவீதத்திலிருந்து 47.5 சதவீதமாக உயர்த்திற்று. ஆனால், அதே சமயம் வரிவருவாய்த் தொகுப்பைப் பகிரந்தளித்தபிறகு பற்றாக்குறை எய்திய மாநிலங்களுக்கு (Post-Devolution Deficit States) இந்த வருவாயில் 7.5 சதவீதத்தை ஒதுக்கீடு செய்தது. இவ்வாறாக, 10ஆம் நிதிக்குழுவால் உபரி மாநிலங்கள் என்று கண்டறியப்பட்ட தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் பகிர்ந்து கொள்ளத்தக்க நிகர வருவாய்த் தொகுப்பில் (Net Sharable Pool) 40 சதவீதத்திலிருந்து தங்கள் பங்கைப் பெற்று வருகின்றன. ஏற்கெனவே வருமான வரியில் நாம் இழந்ததற்கு மேலாக இந்தக் கூடுதல் இழப்பையும் நாம் அடைந்து வருகிறோம். வரிவருவாய்த் தொகுப்பைப் பகிர்ந்தளித்தபிறகு பற்றாக்குறை எய்திய மாநிலங்களுக்கு இவ்வாறு குறிப்பிட்ட அளவிற்கு சிறப்பு ஒதுக்கீடு செய்வதே அந்த மாநிலங்களுக்கு இரட்டிப்பு வெகுமதி வழங்குவதாகப் பொருள்படும். ஆகவே, எந்த வகையான மாநிலங்களாக இருப்பினும் சரி, அவற்றுக்கென்ற குறிப்பிட்ட எந்த வகையிலான சிறப்பு ஒதுக்கீட்டையும் செய்யும் வழக்கத்தை விட்டுவிடுமாறு இந்நிதிக்குழுவை நான் வலியுறுத்துகிறேன். மேலும், பகிர்ந்தளிக்கத்தக்க மத்திய ஆயத்தீர்வை வரித்தொகுப்பில் பகிர்ந்தளிக்கும் அளவை 60 சதவீதத்திற்கு உயர்த்துவதற்குப் பரிந்துரைக்க வேண்டுமெனவும் இக்குழுவைக் கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு மாநிலங்களுக்கும் சம அளவில் ஒரு சீராக நிதியைப் பகிர்ந்தளிப்பதற்கு உரிய பொருத்தமான அடிப்படை விதியை உருவாக்குகின்ற அதே சமயம் மக்கள் தொகை கட்டுப்பாடு குறித்து மாநிலம் மேற்கொள்ளும் முயற்சிகள், வரிவருவாய் முயற்சிகள் மற்றும் மாநிலங்களில் மைய அரசின் முதலீட்டளவு ஆகியவற்றுக்காக உரிய முக்கியத்துவம் (Weightage) அளிக்கப்படவேண்டும். 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின்படி மக்கள் தொகை கணக்கீட்டின்படி மக்கள் தொகை அடிப்படையில் 40 சதவீதமும், மக்கள் தொகைக் கட்டுப்பாடு முயற்சிகளுக்கு 20 சதவீதமும், வரிமுயற்சிகளுக்கு 20 சதவீதமும், நபர்வாரி வருமானத்தின் அடிப்படையில் (இது உயர்ந்து செல்லச்செல்ல குறைக்கப்படலாம்) 10 சதவீதமும், மைய அரசு முதலீடுகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைச் சரிசெய்யும் பொருட்டு 10 சதவீதமும் என இந்த முக்கியத்துவத்தை (Weightage) அளிப்பது குறித்துக் கருதிப் பார்க்கலாம் என்று கருத்துரைக்க விழைகிறேன்.

மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மாநிலத் தொகுப்புநிதியைப் பெருக்குவதற்கும், உள்ளாட்சிகளின் வருவாயை உயர்த்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்கு குழு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று குழுவின் ஆய்வு வரம்புகளில் சேர்க்கப்பட்டுள்ளதை தமிழ்நாடு அரசு வரவேற்கிறது. மாநில நிதிக்குழு வழங்கிய பரிந்துரைகளை இவ்வரசு 1997—98ஆம் ஆண்டு முதலே செயற்படுத்தியுள்ளது. மாநில நிதிக்குழு பரிந்துரைத்த வருவாய்ப் பகிர்வுத் திட்டத்தின் கீழ் 1997—98ஆம் ஆண்டில் ரூ.662 கோடியும், 1998—99ஆம் ஆண்டில் ரூ.814 கோடியும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. நமது மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானியம் வழங்க ரூ.100.71 கோடி மட்டுமே 10ஆம் நிதிக்குழு பரிந்துரைத்துள்ளது. எங்களுடைய கோரிக்கையில் நாங்கள் விரிவாகத் தெரிவித்துள்ளபடி, இன்னும் பெருமளவு மானியங்களை வழங்குவதன் மூலமாக

உள்ளாட்சிகளின் வருவாயைப் பெருக்க வேண்டுமென்று நான் இந்தக் குழுவைக் கேட்டுக் கொள்கிறேன்.

31.3.1999ஆம் நாளுள்ளபடி, மாநிலத்தின் கடன்சுமை குறித்து ஆய்வு செய்வதற்கான பொறுப்பு 11வது நிதிக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில், முந்தைய (10ஆம்) நிதிக்குழுவின் பரிந்துரைகளின் செயற்படும் கால அளவு முடிகின்ற நாளான 31.3.2000ஆம் நாளன்று உள்ளபடி கடன் நிலைமையை ஆய்வு செய்வதே முறையாக இருக்கும் என்று நான் சுட்டிக்காட்ட விழைகிறேன். தமிழ்நாடு அரசு ஆண்டுக்காண்டு கடன்களை அதிகம் பெற்றே திட்டச் செலவினங்களுக்கு நிதியளித்து வந்துள்ளது. பொதுத்துறை நிறுவனங்கள் அதிக அளவில் கடன் பெறுவதை முன்னிட்டு அவற்றுக்கு அரசு உத்தரவாதம் அளிப்பது மிக முக்கியமானதாகும். மாநில அரசு இவ்வாறு நிறுவனங்களுக்கு கடன் உத்தரவாதம் வழங்குவதற்கு, தகுந்த சட்டம் ஒன்றை இயற்றுவதன் மூலம், உச்சவரம்பு விதிக்க வேண்டுமென்று கருதி வருகிறது. மாநில அரசு எதிர்பாராச் செலவு நிதிப் பொறுப்புகளை வரம்பிற்குள் கொண்டு வர முயற்சி எடுத்து வரும் அதே சமயத்தில், கடன் சுமை உயர்ந்துள்ளது; கடந்த பல ஆண்டுகளில் வருவாய் வரவுகளில் கடன்களைச் செலுத்துவதற்கான பங்கு ஆண்டுக்காண்டு அதிகரித்து வந்துள்ளது. இதன் விளைவாக வரவு–செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கில் (வட்டி வழங்கும் வகையில்) கணிசமான நிதிச் செலவுப் பொறுப்பேற்படும். ஆகவே, மாநில அரசு எதிர்கொள்ளுகின்ற இத்தகைய இடர்ப்பாடுகளை இந்நிதிக்குழு புரிந்து கொண்டு உரியவாறு கணிசமாக கடன் நிவாரணம் வழங்குவதற்குப் பரிந்துரைக்க வேண்டுமென்று இக்குழுவைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும், சிறு சேமிப்புக் கடன்களை நிரந்தரக் கடன்களாக மாற்றவும் மாநிலங்களில் வசூலாகும் சிறுசேமிப்பு நிதியில் 90 சதவீதத்தை அம்மாநிலத்திற்கே கடன்களாக வழங்கவும் பரிந்துரைக்க வேண்டுமென்றும் நான் குழுவை வலியுறுத்த விரும்புகிறேன். சிறுசேமிப்புக் கடன்கள் மீதான வட்டியையும் குறைக்கலாம். இவ்வாறு கடனாகப் பெறுகின்ற நிதிகள் யாவும் சமூகத்துறையில் முதலீடு செய்யப்படுகின்றன; இவற்றிலிருந்து உடனடியாக கணிசமான நிதி வருவாயை நாம் பெற இயலாது. இந்த நிலையில் நான் இங்கு குறிப்பிட்ட நடவடிக்கைகள் எல்லாம் மிகவும் அவசியமாகும். இதே காரணங்களுக்காகவே இப்போது திட்டப்பணிகளுக்கு நாம் பெறுகின்ற நிதி உதவியின் கடன்: மானிய விகிதாச்சாரம் 70:30 என்று இருப்பதை திருத்தியமைத்து, கடன் : மானியம் 50:50 என்று இருக்குமாறு பரிந்துரைக்கப்பட வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய கோரிக்கையில் நிர்வாகத் தரத்தை உயர்த்துதல் மற்றும் தனிப் பிரச்சினைகளுக்காக ரூ.2129 கோடி வழங்குவது குறித்து செயற்குறிப்புகளை அளித்துள்ளோம். இச்செயற்குறிப்புகளை மிகுந்த கவனத்துடன் நாங்கள் தயாரித்துள்ளோம். மிக மிக இன்றியமையாதவை என்று கருதப்பட்ட திட்டங்களை மட்டுமே நாங்கள் முன்வைத்துள்ளோம். இவற்றுக்கு தாராள மனதுடன் மானியங்களைப் பரிந்துரைக்குமாறு குழுவைக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் முன்னரே எடுத்துக் கூறியுள்ளவாறு, மாநிலங்களுக்கு முழுமையான தன்னாட்சியும், மத்தியிலே கூட்டாட்சியும் வளர வேண்டும் என்பதற்கு இந்த அரசு தொடர்ந்து குரல் கொடுத்து வந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாட்டில் கூட்டுறவு வங்கிகள் இந்த தன்னாட்சி – கூட்டாட்சித் தத்துவ வழியில் மிகச் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளதை இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன். தக்க முறையில் இந்த வெற்றி விதிமுறையை நீட்டிக்கும் வாயிலாக (as a logical extension), மாநில அரசும் வங்கி மற்றும் காப்புறுதித் துறைகளில் (Banking and Insurance Sectors) அனுமதிக்கப்பட மறுப்பதற்கு எவ்வித காரணமும் இல்லை என நான் கூறுவேன். இங்கே நான் குறிப்பிட்டது இந்த நிதிக்குழுவின் ஆய்வு வரம்புக்குள் முற்றாக வராவிடினும், மாநிலத்தில் தொழில்வளம் செழிப்புற்றோங்கும் வகையில் உரிய காலத்தில் உரிய முயற்சிகளை மேற்கொண்டு தேவையான நிதிகளைப் பெற இயலும் பொருட்டு மாநில அரசுகள் வங்கி மற்றும் காப்புறுதி நிறுவனங்களை நிறுவிட இக்குழு மைய அரசுக்குப் பரிந்துரைக்குமாறு நான் விழைகிறேன்.

11வது நிதிக்குழுவின் முன்னர் உள்ள முக்கிய பிரச்சினைகள் குறித்து எங்கள் கருத்துகளை நான் தெளிவுபட எடுத்துக் கூறியுள்ளேன். இந்த அரசின் கருத்துரைகளின் மீது உடன்பாடான நோக்கில் கருத்து முடிவெடுத்து நிதிப்பகிர்வு குறித்தும், மானியங்களை வழங்குவது குறித்தும் தேவையான சாதகமான பரிந்துரைகளைச் செய்யுமாறு குழுவை நான் வேண்டிக் கொள்கிறேன்.

11வது நிதிக்குழுவின் தலைவரும், உறுப்பினர்களும், அலுவலர்களும், பணியாளர்களும் சென்னையில் தங்கியிருக்கும் இந்நாட்களில் மிக்க மகிழ்ச்சியும் நலனும் பெறுக என்று நான் வாழ்த்துகிறேன். ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906



உங்களின் நீண்டநாள் கனவை நனவாக்கும் புதிய திட்டம்.

## கோ-ஆப்டெக்ஸின்

# பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்.

உங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, "**பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்**".

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலுத்தினால் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் மதிப்பில், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் ஓர் அரிய வாய்ப்பு!

**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை !**

| வ.எண் 1 | மாதச் சந்தா ரூ. 2 | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை ரூ. 3 | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 4 | கூடுதல் தொகை (3+4) ரூ. 5 | அரசு தள்ளுபடி * ரூ. 6 | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 7 |
|---|---|---|---|---|---|---|
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள 20%க்கு ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது திட்டத்தின் முதிர்வு காலத்தில் அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, பட்டா[illegible]விளை, குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - கோயம்புத்தூர், கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெக்ஸ் பவளம் - ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப்டெக்ஸ் பட்டு மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் மற்றும் இதர பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

**இன்றே இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.**

**கோ-ஆப்டெக்ஸ்**
தமிழ்நாடு கைத்தறி

பாரம்பரியத்தின் பெருமை. காலத்திற்கேற்ற ரசனை.

தமிழரசு

பதிவு எண். M.8676
Licence No.TN/MS(C)/PP-23

